# தூண்கள்




## பழைய மாணவர் சங்கம்

யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

# தூண்கள்

## 2008

வெளியீடு:

மலர்க்குழு,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
சங்கானை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "தூண்கள்" |
| வெளியீடு | : | முதலாவது வெளியீடு - 2008 |
| முகவரி | : | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை. |
| உரிமை | : | பழைய மாணவர் சங்கத்திற்கு |
| அச்சுப்பதிப்பு | : | சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை. |
| பக்கங்கள் | : | 75 |

| | | |
|---|---|---|
| Title | : | THOONKAL |
| Edition | : | 1st Edition - 2008 |
| Address | : | J/Chankanai Sivapragasa Maha Vidyalayam, Chankanai. |
| Copy Right | : | To the Old Boy's Association |
| Printers | : | Saraniya Offset Printers, Kasippillai Building, Chankanai. (021-4591220) |
| Pages | : | 75 |



# சமர்ப்பணம்

**சிவம் பிரகாசிக்கும்**

**சிவப்பிரகாசத்தில்**

**எழுந்தருளி அருள்பாலித்துக்கொண்டிருக்கும்**

**ஸ்ரீஞானவைரவப் பெருமானின்**

**பாதகமலங்களுக்கு**

**இம்மலர் சமர்ப்பணம்.**

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழிய தினமே
சீர் மிகு சங்கானை நகர்சேர்
சிவப்பிர காச மகா வித்தி யாலயசாலை
நாள் தோறும் நலமே
செந்தமிழ் ஆங்கிலம் சிவநெறி ஓங்கி
சுந்தர அறிவொளி காட்டி
உயர்தரும் கலைகளைப் போற்றி
ஊர் எங்கும் நற்பணி யாற்றி
பண்புறு மாணவர் உயர்வுற ஆக்கி
பாரினில் அவர்களை ஊக்கி
வாழி வாழி வாழி
வாழிய வாழியவே.

# சர்வதேச இந்துமத குருபீடம்

ජාත්‍යන්තර හින්දු ආගමික ගුරුපීඨම්

INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM

(APPROVED BY THE COVERNMENT OF SRI LANKA)
GURU PEEDATHIPATHI
DR.SRI IYAPPATHASAN SAMBASIVA SIVACHCHARYAR
(Justice of Peace for All island)
751A Bloemendhal Road, Colombo 15.

---

DR.SIVA NITHIANANTHA SIVACHARYAR
(CHIEF ORGANIZER - JAFFNA DISTRICT)
MURUGAN KOVIL RD, CHANKANAI.
Mobile:- 0779231805


---

## ஆசிச்செய்தி



யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கமானது ஸ்தாபிக்கப்பட்டு 18 ஆண்டுகள் பூர்த்தியானதையிட்டு, வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வுறுகின்றேன்.

பாடசாலை - சமூகம் என்ற இரண்டினதும் ஆரோக்கியமான இடைவினையே பாடசாலையை முன்னேற்றும். சமூகம் என்பதன் நிறுவனப்படுத்தப்பட்ட பிரதிநிதிகளாக பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் திகழ்கின்றன.

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது துடிப்புமிக்க இளஞர்களின் செயற்பாடுகளினாலும், அதிபர் அவர்களின் சீரிய நெறிப்படுத்தலினாலும் திறம்பட இயங்கிவருகின்றது. காலத்தின் தேவையாகிய ஆவணப்படுத்தல் முயற்சியினை இச்சிறப்பு மலரானது ஓரளவு பூர்த்திசெய்யும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் மேலும் வளம்பெறவும், மலர் சிறக்கவும் எல்லாம்வல்ல பரம்பொருளின் மேலான அனுக்கிரகம் கிட்ட ஆசீர்வதிக்கின்றேன்.

சுபம்.

இங்ஙனம்,

***சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சார்யார்***

பழைய மாணவரும் பாடசாலை நிறுவுனர் குடும்பத்தைச் சேர்ந்தவரும்
கரவெட்டி பிரதேச உதவிச்செயலருமான திரு. ச. சிவசிறி
அவர்கள் வழங்கிய



# வாழ்த்துரை

**வாடா மலரின் நீங்கா அழகிற்கும் மணத்திற்குமான மனமுவந்த வாழ்த்து**

அரிய மனித வாழ்வின் தேடுதற்கரிய பெரிய பொருள் கல்வி. எம் கண்களைத் திறப்பித்து உலகில் வாழும் திறனுக்குரிய பாதையை பண்புறக் காட்டுவது நாம் கற்ற கல்வியே. அத்தகைய சிறந்த விழுமியப் பொருளான கல்வியை எமக்கு கருத்துடன் தரும் களஞ்சியமாகத் திகழும் வித்தியாசாலைகள் இறை ஆலயங்களுக்கு ஒப்பானவை. இவ்வாறு சீர்பெரும் கல்வி நிலைகளில் ஒன்றாகத் திகழ்வது எமது பாட்டனாரால் அமைக்கப்பட்டு இன்று பெரு விருட்சமாக வளர்ந்துள்ள யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகும். ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தலே ஏற்றமுறு உயர் தருமம் எனக் கண்டு வாட்டமுறும் மன்பதையின் அறிவு மயக்கம் நீங்கி கல்வி பெருஞ்செல்வம் என்ற பெரும் பேற்றை எமது சங்கைநகர் மக்களுக்கு அள்ளித் தந்த சங்கப் பலகை இந்நிறுவனம். இப்பலகையில் அமர்ந்து கல்வி பல கற்று கல்விமான்களாய், கனவான்களாய், திறனாளிகளால், தொழில் முதலாளிகளாய் பலவாய் பெருமை பெற்று திகழ்பவர்கள் எண்ணில் அடங்கார். அவ்வகையில் பலன்பெற்ற பெருமக்கள் பலரும் ஒன்றுசேர்ந்து அமைத்த இப்பழைய மாணவர் சங்கம், தாயின் திறத்தை தனயர்கள் தகைபெற நிலைநாட்டுபவர்கள் என்ற வழக்குக்கு ஏற்ப, தமது கல்வித் தாயின்சீர்சால் சிறப்பைச் செப்பும் விதத்தில் சிறந்த இம்மலரை இங்கு முகிழ்ப்பித்து மலர்ச்சியாக மணம்வீசச் செய்துள்ளனர். இத்தகைய பெருமைசால் இம்மலருக்கு இங்கு என் ஆரம்பக் கல்வியைப் பெற்றவன் என்ற வகையிலும் எம்மனோவின் சென்றகால நிகழ்வை வருங்கால வளர்ச்சிகளை நேற்று, இன்று, நாளை எனப் படம்பிடித்துக்காட்டும் வரலாற்று ஆவணமாகவும் அமையும் இம்மலரை என்றும் வாடாத மலராக மணம் கமழ வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி. வணக்கம்.

அன்புடன் வாழ்த்தும்,
**சண்முகராஜா சிவசிறி**
(நிறுவுனர் குடும்பம்)

### எமது பாடசாலையின் அதிபரும் பழைய மாணவர் சங்க தலைவருமான திருமதி.ச.யோகேஸ்வரன் அவர்கள் வழங்கிய



## வாழ்த்துச் செய்தி

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் வெளியிடுகின்ற நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். 1200 மாணவர்கள் கல்வி கற்கும் எமது மகா வித்தியாலயத்தில் கல்வியும், இணைபாடவிதானச் செயற்பாடுகளும் (விளையாட்டு மன்ற செயற்பாடுகள், நலனோம்புத் திட்டங்கள்), துரிய வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ்வளர்ச்சிக்கு பக்கத் துணையாக நின்று பெரும் பங்காற்றுபவர்கள் பழைய மாணவர்கள் என்பதனை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்று எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று காட்சியளிப்பதற்கு முதற்தேவையாக இருந்த முன்றல் மதிலைப் புனரமைத்துத் தந்துள்ளனர். வருடாவருடம் நடைபெறுகின்ற இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வெற்றியீட்டுகின்ற மாணவர்களின் வெற்றிக் கிண்ணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். மாகாண மட்டத்தில் பங்குபற்றிய கரப்பந்தாட்ட பெண் அணியினரின் போக்குவரத்துச் செலவின் ஒரு பகுதியைக் கொடுத்து, வெற்றிக் கேடயங்களைப் பெற்று, மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பெயரைப் பதிப்பதற்காக உற்சாகப்படுத்தி வழிப்படுத்தியுள்ளனர்.

மேலும் கணனி யுகத்தில் கணனிக் கல்வியை முழு மாணவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காக காலைப் பொழுதில் கிழமை நாட்களில் இலவசமாக துறைபோந்த பழைய மாணவர்கள் செயற்படுத்தி வருகின்றார்கள். மாணவர்கள் உற்சாகமாக கணனிக் கற்கை நெறியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் கள். ஆசிரியர்களதும் மாணவர்களினதும் பல்வேறு தரவுகளை இயந்திரகதியில் பெற்றுக்கொள்ள உதவும் மென்பொருளாக்கத்தையும் வழங்கியுள்ளனர். பல்வேறு துறைகளிலும் உற்சாகமாக ஈடுபட்டுவரும் பழைய மாணவர்களிற்கு வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்களும் நிதியுதவி வழங்கி வருகின்றார்கள். வெளிநாட்டில் வாழும் நிதியுதவி வழங்கிய பழைய மாணவர்களுக்கு நன்றியை மகா வித்தியாலயத்தின் சார்பில் தெரிவித்துக்கொண்டு, நிதிப் பற்றாக்குறையுள்ள பழைய மாணவர்கள் சங்கத்துக்கு உற்சாகமூட்டும் வகையில் நிதியுதவி செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொண்டு, தொடர்ந்து மலர் வெளிவர உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்களுக்கு ஆண்டவன் நல்லாசிகள் என்றும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திருமதி.சந்திராதேவி யோகேஸ்வரன்**
அதிபர்,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

## எமது பாடசாலையின் பிரதி அதிபர்
## திரு. க. உபேந்திரன் அவர்கள் வழங்கிய



# வாழ்த்துச் செய்தி

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலையில் அமைந்துள்ள பழைய மாணவர் சங்கம் மிக முக்கியமானதாகும். எமது பாடசாலை பழைய மாணவர் சங்கமும் வளர்ந்துவரும் ஒரு அமைப்பாகும்.

பழைய மாணவர் சங்கம் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கி வருவது பாராட்டுக்குரியது. 18வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட உள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றம் மேலும் வளர்ச்சியடைந்து பாடசாலைக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**க. உபேந்திரன்**
பிரதி அதிபர்,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
சங்கானை.



## எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளருமான திரு.கா.சந்திரபாலன் அவர்கள் வழங்கிய



# வாழ்த்துச் செய்தி

கல்வி, கலாச்சார, பண்பாட்டு விடயங்களில் பெருமைமிக்க பிரதேசமான சங்கானையின் மையத்தில் அமைந்துள்ளது சிவப்பிரகாச மகா வித்தியாலயம். 1928இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கல்விப் பாரம்பரியத்துடன் இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது. இப்பாடசாலை ஆல்போல் வேரூன்றி படர்ந்து செழித்து நிற்பதைக் காண்கின்றோம். பல்லாயிரம் மாணவர்கள் இப்பாடசாலையில் பயின்று வெளியேறியுள்ளனர். பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். இப்பாடசாலையின் துரித வளர்ச்சிக்கு இங்குள்ள பெற்றோர்களின் பங்களிப்பு உதவியாயுள்ளது. அதேபோல இங்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் போற்றுதற்குரியவர்கள் ஆவர். இன்று இப்பாடசாலை கல்வித் துறைகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் உச்ச நிலைக்குச் சென்று சாதனை படைத்துள்ளது. மேலும் மேலும் இப்பாடசாலை வளர்ந்து கல்வி ஒளிபரப்ப வேண்டுகிறேன். இன்று இங்கு பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கட்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இங்கு பயிலும் மாணவர்களின் வாழ்வு சிறக்க என் வாழ்த்துக்கள் உரியனவாகும்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பக்கபலமாகச் செயற்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் ஆகியோருக்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பணியாற்றும் பழைய மாணவர் சங்கம் வெளியாகும் இம்மலர், இப்பாடசாலையின் வரலாற்றைப் பதிவுசெய்யும் நல்ல ஆவணமாக அமையும் என நம்புகின்றேன்.

17.11.2008
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

**கா.சந்திரபாலன்**
ஓய்வுபெற்ற அதிபர்

**எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்**
**உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான**
**திரு.செ.குபேரநாதன் அவர்கள் வழங்கிய**



# வாழ்த்துச் செய்தி

**'காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப்பெரிது'**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப - தாம் கல்விகற்ற பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலே கல்விப்பணி ஆற்றியோர் யாவரையும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பாடசாலையின் பழைய மாணவர்கள் - சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதன் மூலம் நன்றியுடன் நினைவிற்கொள்ள கடமைப்பட்டுள்ளமையை உணர்ந்து மனத்திருத்தி சிரந்தாழ்த்தி சிவப்பிரகாசம் என்னும் பாடசாலை அன்னைக்கு வணங்கி நன்றிதனைச் செலுத்துகின்றோம் என்ற வகையில் அம்மலருக்கு வாழ்த்துச்செய்திதனை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 1985ஆம் ஆண்டிற்குப் பின்னர் திரு.க.சந்திரபாலன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து சங்கானைப் பிரதேசத்தின் மாணவர்களின் கல்வி வளர்ச்சி அபிவிருத்தி முன்னேற்றத்திற்குரியதாக அமைந்தது. மாணவர்களும் நல்ல பெறுபேற்றினைப் பெற்றதுடன் தொடர்ந்து உயர்கல்வி பெற்று படித்த இளைஞர்கள் அதிகரிக்கப்பட்டு தாம் சமூகத்தில் நன்நிலையில் மதிப்புப் பெற்றமை. பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் பற்றுக்கொண்டு கொண்டு உதவும் கரங்களாகத் தொழிற்படுவது பாராட்டுக்குரியது.

அவரைத் தொடர்ந்து யானும் 1992ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராகக் கடமை புரிந்தவன். அப்போது இளவாலை, மாதகல் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் சங்கானையைச் சூழ வசித்தனர். அம்மக்களின் பிள்ளைகளும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் கல்வி பயில வாய்ப்பு வசதி வழங்கப்பட்ட நிலையில் மாணவர் தொகை வகுப்பில் இரட்டிப்பாக அமைந்தன. அவ்வேளையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் சேவை மனப்பான்மையுடைய பழைய மாணவர்களும் பல வசதிகளைச் செய்து உதவும் கரங்களாக பாடசாலை அதிபர் முகாமைத்துவ துறையினருக்கு உதவி கல்வி வளர்ச்சிதனை பாதிக்காவண்ணம் பெற்றோர்கள், நலன்விரும்பிகளும் உதவியமை மனங்கொள்ளத்தக்கது.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் கல்வி வழிப்புணர்வில் நல்ல திருப்பம் சந்திரபாலன் வரிசையில் யானும் கணேசலிங்கம், கைலாசநாதன் போன்றோர் நல்ல நிலையில் வழிநடத்திச் சென்றமை சங்கானை சிவப்பிரகாச பாடசாலைச் சமூகம் நன்றியுடன் பாராட்டுவது மனங்கொள்ளத்தக்கது. அவ் அதிபர்களும் பதவி உயர்வு பெற்று கல்வி நிர்வாக பணிதனை நிறைவுபெற்று நிறைவுடன் தொழிலாற்றுவது மாணவர்களதும் மக்களதும் ஆசியென்றே குறிப்பிடலாம்.

இப்பாடசாலை மென்மேலும் கல்வியில் பல வளர்ச்சிப்படிகள் கண்டு கல்லூரி அந்தஸ்தைப்பெற வாழ்த்துவதோடு அதற்கு உதவும் கரங்களாகத் தொழிற்படும் பாடசாலைப் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரை பாராட்டி நல்லாசி கூறி அமைகின்றேன்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில்,
மருதனார்மடம்.

**செ.குபேரநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
உடுவில்.



எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்
பழைய மாணவரும் முன்னாள் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான
திரு. ஆ. வ. கணேசலிங்கம் அவர்கள் வழங்கிய



# வாழ்த்துச் செய்தி

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் தமது சங்கத்தின் 18வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சிறப்புமலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1928ஆம் ஆண்டு இவ்வூரைச் சேர்ந்த பெரியார் சிவசம்பு அவர்களால் சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாக்கவென ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்வேறு வளர்ச்சியினைப் பெற்று இன்று எண்பது வருடங்களைக் கடந்து உயர்ந்து நிற்கின்றது.

குறிப்பாக 1980ஆம் ஆண்டிற்குப் பின்னர் இப்பாடசாலையில் ஒரு வளர்ச்சிப் போக்கினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அண்மைக் காலங்களில் இப்பாடசாலையின் பெறுபேறுகள் எமக்கு மகிழ்ச்சியினைத் தருவதோடு கிராமத்திற்கும் பெருமையளிக்கின்றது.

அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தைத் தருகின்ற எமது பாடசாலையின் வளர்ச்சியில் பக்கபலமாக இருந்து செயற்படும் பழைய மாணவர் சங்கத்தினைப் பாராட்டுவதோடு அவர்களின் செயற்பாடுகள் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் இப்பாடசாலை மேன்மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சிபெற இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ. வ. கணேசலிங்கம்
முன்னாள் அதிபர்

**எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்**
**தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான**
**திரு.ச.கைலாசநாதன் அவர்கள் வழங்கிய**



# வாழ்த்துச் செய்தி

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தனது பதினெட்டாவது ஆண்டு நிறைவில், சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு பேருவகை அடைந்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் உள்ளூரிலும், வெளியூரிலும் இருக்கின்ற அன்புக்குரிய பழைய மாணவர்கள் நான் அதிபராக இருந்த காலத்திலும் தற்போது பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்தும் பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் பாடசாலையின் பன்முக வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வருவது கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களின் இந்த முயற்சி காரணமாக, பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று, சாதனை படைத்திருக்கின்றார்கள். இத்தகைய முயற்சிகளைவிட, மேலும் ஒருபடி முன்னேறி தங்களின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும், சமூகத்திற்கு முன்வைக்கவும் பதினெட்டாவது ஆண்டு நிறைவில் சிறப்புமலர் வெளியிடுவது மிகப் பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

பழைய மாணவர் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டு நிறைவில் வெளியிடும் மலரினூடாக இலைமறை காயாக இருந்த பல ஆக்கக் கர்த்தாக்களின் உள்ளத்து உணர்வுகள் வெளிக்கொணரப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது. பழைய மாணவர் சங்கத்தின் இச்சிறப்பு மலர் எல்லோர் சங்கத்திலும் தவழ்ந்து நறுமணம் வீச எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான சிறப்பு மலர் காலந்தோறும் வெளிவந்து பழைய மாணவர் செல்வங்களின் உள்ளக் கிடக்கைகள் வெளிக்கொணரப்பட வேண்டுமென பழைய மாணவர்களின் மகோன்னதப் பணிதொடர எனது உள்ளங்கனிந்த இதயபூர்வமான நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

**ச.கைலாசநாதன்**
முன்னாள் அதிபர்

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்
மெமோறியல் ஆங்கில பாடசாலை அதிபருமாகிய
திருமதி.வேனுகா சண்முகரத்தினம் அவர்கள் வழங்கிய



# வாழ்த்துச் செய்தி

## செழித்தோங்கி வளர...

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினது 18வது ஆண்டு அகவை நிறைவை ஒட்டிய சிறப்பு மலர் மலர்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரினை வெளியிட உழைத்த அன்பிற்குரிய அதிபர் திருமதி.ச.யோகேஸ்வரன் அவர்களையும் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றும் ஆசிரயர் பெருந்தகைகளையும் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.வி.செந்தூரன், பொருளாளர் திரு.வி.ரவிதரன் ஏனைய நிர்வாக உறுப்பினர்களையும் பாராட்டுகின்றேன்.

மலரானது நிறைவான ஆக்கங்களையும் கல்லூரியின் பெருமையையும் புகழையும் உலகெங்கும் பறைசாற்றும் ஒரு ஆவணப் பதிவாக அமைகின்றது. இவ்வித்தியாலயத்தில் மிகச் சொற்ப காலம் 30.09.2004 தொடக்கம்ம 30.01.2005 வரை எனது சேவைக்காலத்தில் முதன் முதலாக அதிபராகக் கடமையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தினைப் பெரும் பேறாக எண்ணி மகிழ்கின்றேன். அக்காலத்தில் வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் வழங்கிய ஒத்தாசைகள், உதவிகள் என்பவற்றிற்கு மனப்பூர்வமான நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன். வெளிநாடுகளிலுள்ள இவ்வித்தியாலய மைந்தர்கள் கல்லூரி நூலக வளர்ச்சிக்காக வழங்கிய விஞ்ஞான நூற்பொதிகள் இக்கல்லூரியின் நூலகத்திற்கும் மாணவர் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பொக்கிசமாக விளங்குகின்றது.

இம்மலர் பழைய மாணவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கிவருகின்ற ஊக்குவிப்புக்களைப் பறைசாற்றி நிற்பதுடன் மேலும் பல உணர்வுள்ள பற்றுள்ள மாணவர்களை உருவாக்கும் உன்னத பணியைக் கச்சிதமாக நிறைவேற்றும் என்பது திண்ணம். இச்சங்கத்தின் அயரா முயற்சியினால் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாயம் தனது செயற்பாடுகளை உலகெங்கும் பிரகாசிக்கச் செய்யவும் வித்தியாலயம் செழித்தோங்கி வளர்ந்து சிறந்த சமூக விழுமியங்களைப் பேணும் பல்லாயிரம் மக்கள் மூலம் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பவும் எல்லாம்வல்ல கல்லூரி வைரவப்பெருமான் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டி பிரார்த்தித்து எனது சிறந்த வாழ்த்துக்களை மனப்பூர்வமாக வாழ்த்தி நிற்கின்றேன்.

"வாழ்க வித்தியாலய நாமம் - செழித்தோங்கி
வளர்க நின்பணி"

திருமதி.வேனுகா சண்முகரத்தினம்
முன்னாள் அதிபர்

## பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்
## திரு. க. இரத்தினேஸ்வரன் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

யா/சங்கானை சிப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் 18வது ஆண்டில் தனது கால்களைப் பதித்து, பாடசாலையின் வளர்ச்சியே எமது இலட்சியம் என்ற உயர்ந்த நோக்கில் செயலாற்றிவரும் இப்பழையமாணவர் சங்கம் தமது கடந்தகால செயற்பாடுகளைளும் எதிர்கால செயற்பாடுகளையும் விழாவின் சிறப்புமலர் மூலம் வெளிக்கொணர்வதன் உறுதியான எண்ணத்தை இவ்வேளையில் நன்றியுணர்வோடு பாராட்டுகின்றேன்.

கடந்த காலங்களில் கலட்டி பாடசாலை என்று கூறிவந்த பாடசாலை இன்று மகா வித்தியாலயம் என்று தரம் உயர்ந்து நிற்கின்றது. இதற்குப் பல அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அரசியல்வாதிகள், சமூக நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், பாடசலை அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு வந்தது. இதற்கு மேலாக பழைய மாணவர்கள் இன்று மிகவும் உன்னதமாக உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள பழைய மாணவர்களை ஒன்றிணைத்து பல கிளைகளை ஆரம்பித்து அவர்களின் ஆற்றல் பலம் ஆகியவற்றை ஒன்றிணைத்து சங்கானை பகுதியில் தரமான கல்லூரியாக்கி சமூகத்தின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்து வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சங்கானைவாழ் மாணவர்கள் இவ்வித்தியாலயத்தில் கல்விகற்று உயர்வு உன்னத மாணவர்களாகத் திகழ வேண்டும் என்ற எல்லோரது எண்ணங்களையும் நிறைவேற்றும்பொருட்டு பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், அங்கத்தவர்கள் யாவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற குறிக்கோகளைக் கடைப்பிடித்து வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போட்டுவருவதைக் கடந்தகாலங்களில் வித்தியாலயத்தில் அவர்களின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றது. இம்மலரானது சகல உள்ளங்களின் உணர்வலைகளைத் தட்டியெழுப்பி சங்கானையில் சகல பிள்ளைகளும் கல்விகற்க ஏற்ற வசதிகளை ஏற்படுத்த யாவரும் உறுதியாக பழைய மாணவர் சங்கத்திற்கு ஒத்துழைப்பை நல்கி சிறப்போடு செயலாற்ற வேண்டுமென வேண்டி இந்நூற்றாண்டு விழா சிறப்புடன் இனிது நிறைவேறுவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**கா. இரத்தினேஸ்வரன்**

செயலாளர்,

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,

யா/சங்கானை சிவப்பிரகாச ம. வித்தி.

**முன்னாள் எமது பழைய மாணவர் சங்க செயலாளரும்**
**ஸ்தாபகருமான திரு.நா.முருகானந்தன் அவர்களின்**



# வாழ்த்துச் செய்தி

அறிவுக்கடல் பெருக்கிட்டு வானுயர வளரும் எங்கள் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் என்ற ஆலம் விருட்சத்தின் அழியாத விழுதே! பழைய மாணவர் சங்கம்ள என்றால் அது நிகராகாது.

அன்று 1990ம் ஆண்டு சிறுவர்களாக துள்ளிக்குதித்து திரிந்த காலம். அன்று எம் கல்வி அன்னைக்கு ஒரு பக்கபலமான தூணை அமைக்க எடுத்த முயற்சி இன்று பெரிய அரணாகவும் பெரும் விருட்சமாகவும் எமது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு படியிலும் பங்காளியாகவும் பழைய மாணவர் சங்கம் திகழுகின்றது. இதைப் பார்க்க என்மனம் புல்லரிக்கிறது.

சிறிய ஆலம் வித்து முளைத்து பெரும் விருட்சமாகி எத்தனையோ உயிர்கள் தங்கிவாழ வழிசமைக்கிறது. அவ்வாறே எம்மால் விதைக்கப்பட்ட சிறிய விதை இன்று வெளிநாடுகளிலும் வியாபித்து பெரு விருட்சமாகி வெளிநாடுகளிலும் பாடசாலையின் வளர்ச்சியில் தனது பங்கைச் செவ்வனே செய்வதைப் பார்த்து அகமகிழ்கின்றேன்.

ஒவ்வொரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் எவ்வளவு முக்கியமோ? அதை உணர்ந்து எமது பாடசாலையில் உருவாக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் இன்று தனது 18வது அகவையைக் கடந்து தனது சேவைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் உள்ளடக்கி தனது வரலாற்றுப் பயணத்தில் முதலாவது பிரவசமாகிய இம்மலரை வெளியிடுகிறது. உண்மையில் இது இச்சங்கத்தின் ஒரு வரலாற்றுச் சாதனை என்றே கூறவேண்டும்.

இன்றும் எம்மை மாணவர்களாகவே இப்பாடசாலையுடன் இணைத்திருக்கும் பழைய மாணவர் சங்கம் என்றும் நூறு ஆண்டுகள் என்ன ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் எமது பாடசாலைக்காக சேவையாற்ற வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

சாதி மத பேதம் கடந்து சங்கானை வாழ் மக்களை இணைத்து சங்கானை நகரிலே எத்தனையோ புத்திஜீவிகளை உருவாக்கிய எமது பாடசாலைக்கு நாம் என்ன செய்தோம்! என்று ஒவ்வொரு மாணவ நெஞ்சங்களும் ஒருமுறை கேட்டுப்பார்க்கட்டும்!

தமது அறியாமையை மறந்து தனக்கு வாழ்வழித்த பாடசாலைக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்ய இப்பழைய மாணவர் சங்கம் எல்லோருக்கும் வாய்ப்பளிக்கும்.

எம் கடன் பணிசெய்ய எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது கல்வி அன்னைக்கு சேவை செய்வோம் வாரீர் வாரீர்.

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் இம் முதலாவது மலர் சிறப்பாக வெளிவந்துவிட்டது. வருடாவருடம் தனது சேவையையும் பழைய மாணவர்களின் முன்னேற்றத்தையும் ஆவணமாக வெளியிட வேண்டுமென வாழ்த்தி

பழைய மாணவ சங்கமே!
ஓர் பொழுதில் உள்ளங்கையில்
'Mouse" பிடித்து ஒரு 'Click" செய்தே
உலகத்தை பிளக்கும் வரை
"நிமிர்ந்து நில் வளர்ந்து செல்"
என்று முடிக்கின்றேன்.

என்றும் உன் சேவகன்
**நா.முருகானந்தன்**



உப தலைவரின்



# சிந்தனைத் தூறல்...

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமானது சைவப் பெருவள்ளல் சிவசம்பு என்பவரால் 1928.02.01ஆம் திகதி சங்கானைப் பதியினிலே உருவாக்கப்பட்டது. காலம் காலமாக பரிணாமம் பெற்று இன்று வலிகாமம் கல்வி வலயத்தில் மிடுக்குடன் வளர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது. இன்றைய காலத்தில் அகில இலங்கை ரீதியாக எமது பாடசாலையின் பெயர் உச்சரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய நிலையில் பழைய மாணவர்களாக தம்மை இணைத்து பாடசாலையின் முன்னேற்ற படியில் பலவித செயற்பாடுகளைச் செய்தவண்ணமுள்ளனர். பழைய மாணவர்களின் இன்றைய செயற்பாடுகளை ஏனைய மாணவர்களும், சமூகத்தவர்களும், நலன்விரும்பிகளும், வெளிநாடுகளில் வாழ்ந்துவருவோரும், ஆர்வலர்களும் அறியும் நோக்கிலும், எதிர்கால சந்ததியினரும் அறிந்து செயற்படும் நோக்கிலும் அழகிய இச்சிறு நூல் அச்சுப்பெறுகிறது. இது ஒரு வரலாற்றுப் பெட்டகம். இதற்குள் பழைய மாணவர்களின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகள், செயற்றிட்டங்கள் அனைத்தும் தங்கப் பூட்டினால் பூட்டிவைக்கப்பட்டுள்ளன. இதன் "தங்கச்சாவி" உங்கள் கரங்களில் இன்று தவழ்கின்றது. இன்றே திறந்துபாருங்கள். இதற்குள்ளிருக்கும் முத்துக் குவியல்களை.... இவ்வகையில் இச்சிறு அழகிய மலர் வெளிவர எல்லாம்வல்ல கணேசப் பெருமானது பாதங்களைத் தொழுது நிற்கின்றேன்.

சுபம்

15.11.2008

**சி.ரமணராஜா** B.A (Hons)
(கே.எஸ்.ரமணன்)
உபதலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.



செயலாளரின்

# உள்ளத்திலிருந்து...



எமது பாடசாலையானது குறுகிய வளத்தோடு சொற்ப ஆசிரியர் கொண்டு ஓர் சில மாணவர்களோடு ஆரம்பித்துவைக்கப்பட்டு இன்று பல கல்வியாளர்களையும் கல்விமான்களையும் உருவாக்கி எமது பிரதேசத்தை சிறந்த கல்வியாளர் கொண்ட பிரதேசமாகக் கட்டியெழுப்ப காரணமாக இருந்துள்ளது. இத்தகைய முறையில் வளர்ந்து நிமிர்ந்து நிற்பதற்கு அடித்தளமாய் இருக்கும் தூண்களில் ஒன்றாகத் திகழ்வதுதான் எமது பழைய மாணவர் சங்கம்.

இத்தகைய ஓர் உன்னதமான சங்கத்திலே கடந்த ஈராண்டுகளாக செயலாளராகக் கடமையாற்றுவதற்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை என் வாழ்க்கையிலேயே எனக்கு இறைவன் கொடுத்த உன்னதமான வரம் என்று கருதுகின்றேன். எமது பாடசாலைக்கு நிறைய சேவை செய்ய வேண்டுமென்ற அவா என் மனதில் நித்தமும் உதித்தவண்ணமே உள்ளது. ஆனாலும் எனது செயற்பாடுகளைத் பாடசாலையுடனும் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து ஆற்றுவதற்கு முடியாதுள்ளது. ஆனாலும் எனது செயற்பாடுகள் மேலும் பலமுள்ளதாக வெளிநாடுகளில் பல கிளைகளை பழைய மாணவர் சங்கத்திற்கு உருவாக்கி எமது பாடசாலையின் வளர்ச்சியை வானுயர கொண்டுசெல்வதற்கு எனது முயற்சிகள் அனைத்தையும் எனது கல்வித்தாயாகிய பாடசாலைக்கு பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக ஆற்றுவேன் என்பதில் உறுதியாகவே உள்ளேன்.

எமது சங்கத்தின் முதலாவது மலராகிய “தூண்கள்” மலர் சிறப்புற்று வெளிவர ஆசியுரை வழங்கிய சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார் அவர்களுக்கும், மலர் சிறக்க வாழ்த்துச்செய்திகளைத் தந்த கல்விமான்களுக்கும் எமக்கு சகல வழிகளிலும் ஆலோசனையும் ஒத்துழைப்பும் தந்து பக்கபலமாக இருந்த எமது பாடசாலை அதிபர் திருமதி.ச.யோகேஸ்வரன் அவர்களுக்கும் எமது சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கும், விளம்பரம் தந்துதவிய வர்த்தகர்களுக்கும் இம்மலருக்கு செயல்வடிவம் கொடுத்த எமது பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினருக்கும் மற்றும் இம்மலரைச் சிறப்புற வடிவமைத்துத் தந்த சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபம்

**வி.செந்தூரன்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

உபசெயலாளரின்



## உள்ளத்திலிருந்து...

இம்மலர் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினரின் ஒன்றுபட்ட உழைப்பினாலும் அயராத முயற்சியினாலும் வெளிவந்து உங்கள் கரங்களில் தவளவிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலரானது யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர்களினால் "தூண்கள்" எனும் பெயரில் இம்மலர் வெளிவருகின்றது. எமது பழைய மாணவர் சங்கத்தினைத் தோற்றுவித்து 18வது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலராகும். இம்மலர் வெளியீடானது எமது கன்னி முயற்சியாகும். இதேபோன்று இனிவரும் காலங்களிலும் வெளியிட வேண்டும் என்பது பேரவாவாகும். இம்மலர் பழைய மாணவர்கள் பாடசாலையில் செய்த செயற்பாடுகள், இனிவரும் காலங்களில் செய்யவிருக்கும் திட்டங்களையும் மற்றும் தேவைகளையும் கொண்டமைந்ததாகும்.

இம்மலர் வெளியீட்டினால் எமது பழைய மாணவர் சங்கமும் பாடசாலையும் மென்மேலும் பயன்பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இம்மலர் வெளியிடுவதற்கு அயராது உழைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம்மலர் வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது பழைய மாணவர் சங்கம் சார்பாக நன்றிகள் உரித்தாகட்டும்.

**அ.மயூரன்** B.F.A
உபசெயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.





பொருளாளரின்

# உள்ளத்திலிருந்து...

கல்வி உலகின் கலங்கரை விளக்காக ஒளிர்ந்துகொண்டிருக்கும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்ற வகையில் மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

எமது பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு இன்று 18வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தால் இம்மலரானது முதன்முதலாக வெளியிடப்படுவதையிட்டு எம் அகம் மிக மகிழ்கின்றது. இம்மலரானது பழைய மாணவர் சங்கத்தின் வரலாற்றுச் சான்றாக அமைவதுடன் பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம், செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள், வெளிநாடுகளில் வசிக்கும் எமது பழைய மாணவர்களின் கடமையுணர்வுடன் கூடிய செயற்பாடுகள் என்பவற்றை ஆவணப்படுத்தும் வகையிலும் வெளிவருகின்றது. இனிவரும் காலத்தில் வருவோர் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக எம்முடன் இணைந்து பணிகளாற்ற, தூண்களாக நின்று பாடசாலையை நிலைநிறுத்த முன்வரவேண்டும். மாணவர்களுக்குத் தேவையான அறிவினை வழங்கும் ஆக்கங்களையும் இம்மலர் தாங்கி வெளிவருகின்றது.

மேலும் இம்மலரினை வெளியிட எமது பழைய மாணவர் சங்கத்துக்கு பல வழிகளில் ஆக்கங்களையும், ஊக்கங்களையும் தந்து நெறிப்படுத்தி வழிப்படுத்திய அனைவருக்கும் என்மனம்நிறை மகிழ்வுடன் கூடிய நன்றிகள் பல......

**வே.ரவிதரன்**
பொருளாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.



முன்னாள் செயலாளரின்

# உள்ளத்திலிருந்து...



எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து 18வது வருடம் பூர்த்தியாகும் இந்நாளில் இவ்வரலாற்று நூல் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியானதாகும். ஆரம்ப காலங்களில் குறைந்தளவு பழைய மாணவர்களுடன் ஆரம்பித்த பழைய மாணவர் சங்கம் தற்போது அதிகளவு பழைய மாணவர்களை உள்ளடக்கி தனது செயற்பாடுகளையும் விஸ்தரித்திருக்கின்றது. இந்நிலையிலே இப்பழைய மாணவர் சங்க வரலாறு ஒன்றை ஆவணப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவை எமக்கு உண்டு. அந்த வகையில் இந்நூல் வெளிவருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதோடு இதன் தேவையறிந்து செயற்பட்ட பழைய மாணவர் சங்கத்திற்கு நன்றிகளையும் தெரிவிப்பதோடு இந்நூல் சிறக்க எனது உளம் மகிழ்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ.ஜீவபாலன்**
முன்னாள் செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.



முன்னாள் செயலாளரின்

# உள்ளத்திலிருந்து...



ஈழவழத் திருநாட்டின் வடபாகத்து குடாநாடாம் யாழ்பாணத்து எழில் ததும்பும் பெருநகராம் சங்கைப்பதியிலே எழில் கொஞ்சும் தோற்றப் பொலிவுடனே தனக்கெனத் தனிப்பெருமை கொண்டு மிடுக்குடன் பரிணாம வளர்ச்சி பெற்று விளங்குவது யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமாகும். சங்கானை கல்விக்கோட்டத் திலேயே அதிக மாணவர் வளத்தைக் கொண்ட பாடசாலையாக விளங்குவது எமது பாடசாலைதான். கல்வி விளையாட்டு ஏனைய துறைசார் விருத்தி எனப் பல வழிகளிலும் பல கல்விமான்களும் சாதனையாளர்களும் உருவாக வித்திட்ட பெருமை பாடசாலையையே சாரும். சிவப்பிரகாச அன்னையின் பாலைப்பருகி பயன் பெற்றோர் பலர் இன்று பல்கலைக்கழகம், ஆசிரியத்துறை,தொழிற்துறை எனப் பல்துறைகளிலும் மிளிர்கின்றார்கள். மேலாக புலம்பெயர்ந்த நாடுகளில் கூட எமது பாடசாலையின் புகழைப் பறை சாற்றுகின்றார்கள்.

எனது பாடசாலை பற்றிய உள்ளக்கிடக்கையை வெளிக்கொணர்வதோடு இப்பாடசாலையின் பழைய மாணவன் எனக்கூறிக்கொள்வதில் நான் பெருமிதமும் மகிழ்சியும் அடைகின்றேன். இப்பாடசாலை எனக்கு என்ன செய்தது என்பதை விட நாம் பாடசாலைக்கு என்ன செய்தோம்,என்னால் என்ன செய்ய முடியும் என ஒவ்வொரு பழைய மாணவர்களும் சிந்தித்து செயற்பட்டு எமது பாடசாலையை வரலாற்றில் இடம்பெறச் செய்வோம்.

"காலத்துக்கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும"

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப காலத்தின் தேவை அறிந்து எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க வரலாறு ஒன்றை ஆவணப்படுத்த முயன்ற தற்போதய பழைய மாணவர் சங்கத்திற்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பழைய மாணவர்களின் கன்னி ஆக்கமாக வெளிவரும் இந்நூல் இதுவரைக்கும் எமக்கென்று ஒரு வரலாறு இல்லையே என்ற குறையை நிவர்த்தி செய்வதோடு எமது வித்தியாலயச் சிறப்பை நித்திலமெங்கும் மிளிரச் செய்யும் என்பதோடு பழைய மாணவர்களினது நேற்றைய,இன்றைய,நாளைய செயற்பாடுகளையும் வெளிக்கொணர்ந்து பாடசாலையின் தேவைகளை ஒரளவிற்கேனும் பூர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

**த.ரமேஸ்குமார்**
முன்னாள் செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

# முன்னுரை

யாழ் குடாநாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக விளங்கும் சங்கானை நகரினிலே மிடுக்குடன் கூடியதாக கல்வியினைப் போதித்துவரும் ஒரு கல்லூரியாக யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் விளங்கி வருகின்றது. இக்கல்லூரியினை உணர்ந்து பழைய மாணவர் ஒருவரின் சிந்தனையின் பெயரில் "பழைய மாணவர் சங்கம்" உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல இன்னல்களைச் சந்தித்தாலும் தனது பணிகளை நிறுத்திவிடவில்லை. எமது உடல் உள வலிமையினால் நாளாந்தம் மெருகூட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இன்று எமது பழைய மாணவர் சங்கத்திற்கு 18 வயதாகியுள்ளது. இவ்வேளை கடந்த 18 ஆண்டு காலப் பகுதிகளில் செய்த, இன்றைய காலங்களில் செய்துவருகின்ற இனிவரும் காலங்களில் செய்யவிருக்கின்ற செயற்றிட்டங்களையும், தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து பழைய மாணவர்களது செயற்பாடுகளையும் நூலுருப்பெறச் செய்ய வேண்டும் என்ற ஆவலில் இவ் அழகிய மலர் எம்மால் பிரசவிக்கப்படுகின்றது. இது எமது முதற் பிரசவம்.

இனிவரும் காலங்களில் வளர்ந்துவரும் சந்ததியினர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பற்றியும், பழைய மாணவர் சங்க செயற்பாடுகள் பற்றியும் பழைய மாணவர்களின் ஒற்றுமை, புரிந்துணர்வு, தலைமைத்துவம், விட்டுக்கொடுத்தல், விடாமுயற்சி என்பன பற்றியும், வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களின் செயற்பாடுகள், ஊக்குவிப்புக்கள், உதவிகள் பற்றியும் பாடசாலை மாணவர்களின் சாதனைகள் பற்றியும் அறிந்துகொள்வதற்கு இம்முதற் பிரசவம் துணைபுரியும் என்பதனை மறுப்பதற்கில்லை.

இச்சிறுமலர் வெளிவருவதற்கு ஊக்கிகளாகத் திகழ்ந்த எம் சக மாணவர்களுக்கும், ஆசியுரை, வாழ்த்துரைகளை வழங்கி மலரினை மெருகூட்டிய கல்வியியலாளர்களுக்கும் எம்மை தட்டியும் தடவியும் தந்து ஊக்கமளித்து நெறிப்படுத்திய அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளை மனமகிழ்வுடன் கூறிக்கொள்கின்றோம். அழகிய இம்மலரின் முகப்பு அட்டையினை கவர்ச்சிமிகு வகையில் உருவாக்கி வழங்கிய சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தினருக்கும் இம்மலர் சிறப்பு பெறுவதற்கு விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகர்களுக்கும் மேலும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமகிழ் நன்றியைத் தெரிவித்து அனைவருக்கும் விநாயகரது அருட்கடாட்சம் பொலிவதாக... என மனதாரப் பிரார்த்தித்து இம்மலரினை உங்கள் முன்பு சமர்ப்பிக்கின்றோம்.

மலர்க்குழு

# யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய
# பழைய மாணவர் சங்க செயற்குழு
# 2007/ 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திருமதி. ச. யோகேஸ்வரன் (அதிபர்)** |
| உபதலைவர் | : | **திரு. சி. ரமணராஜா** |
| செயலாளர் | : | **திரு. வி. செந்தூரன்** |
| உப செயலாளர் | : | **திரு. அ. மயூரன்** |
| பொருளாளர் | : | **திரு. வே. ரவிதரன்** |
| கணக்காய்வாளர் | : | **திரு. நா. முருகானந்தன்** |

செயற்குழு உறுப்பினர்கள் :

(1) திரு.த.ரமேஸ்குமார்

(2) திரு.க.ராஜ்குமார்

(3) திரு.லோ.அருள்மதன்

(4) திரு.எஸ்.கணேஸ்

(5) திரு.க.பிரசன்னா

(6) திரு.சி.அய்ன்

(7) திரு.எஸ்.விக்கினேஸ்வரன்

(8) செல்வி.எஸ்.சர்மிலா

(7) செல்வி.எஸ்.உஷாநந்தினி

(10) செல்வி.அ.அகல்யா



பழைய மாணவர் சங்க நிர்வாகசபை-2008



எமது பாடசாலை ஆசிரியர் குழாம்

# பொருளடக்கம்


01. பாடசாலையின் வரலாறு ---------------------------------------- 01

02. பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் பற்றி -------------------------- 03

03. பழைய மாணவர் சங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகள் ------------------ 05

04. பழைய மாணவர் சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் ------------------ 07

05. ஆயுள்சந்தா அங்கத்தவர்விபரம் ------------------------------------ 09

06. பாடசாலையின் வளர்ச்சிக்காக பழைய மாணவர் சங்கத்திற்கு உதவி புரிந்த வெளிநாட்டுவாழ் உறுப்பினர்கள் ------------------------------------ 38

07. எமது பாடசாலையின் சிற்பிகள் பழைய மாணவர்களே -------------------- 40

08. எமது பாடசாலையின் வளர்ச்சியில் வெளிநாட்டு பழைய மாணவர்களின் பங்களிப்பு ---- 43

09. வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர்களின் செயற்பாடுகள் --------------- 45

10. வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்களிடம் எமது வேண்டுகோள் ------------ 46

11. கடந்தகால பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் ----------- 48

12. கணனி ஓர் அறிமுகம் ------------------------------------------ 50

13. கணனியைப் பயன்படுத்துவோர் தெரிந்திருக்க வேண்டிய குறுக்கு வழிகள் ------ 57

14. சிவப்பிரகாசமும் பழைய மாணவரும் ---------------------------------- 60

15. நாம் பாதுகாக்கவேண்டிய சொத்துக்கள் எம் முதியோரே ------------------ 62

16. பிரான்சிஸ்கோ கோயாவின் வாழ்வும், கலையும் --------------------------- 65

17. Americans From Across the Atlantic ------------------------- 69

18. இன்றைய மாணவரில் போர் ஏற்படுத்தும் தாக்கங்கள் -------------------- 73

# பாடசாலையின் வரலாறு...

**-ஒரு பறவைப் பார்வை-**

இந்து சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப் படுகின்ற இலங்கைத் தீவின் சிகரமாகத் திகழும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஒரு பகுமியாக விளங்கும். சங்கானைப் பதியிலே எமது பாடசாலை அமைந்து நிமிர்ந்து வளர்ந்து சாதனைகளை நிலை நாட்டி அனைவரது கவனத்தையும் தன் பக்கம் காட்டி நிற்கின்றது. இப்பாடசாலைக்கென தனியானதொரு வரலாறு உண்டு.

18ஆம், 19ஆம் நூற்றாண்டுக் காலங்களில் கீழைத்தேயம் அந்நிய மத தாக்கத்தால் அடிமைப் பட்டுக் கிடந்தது.இந்து சமயம் அதன் பண்பாட்டை இழந்திருந்தது.இத்தகைய காலப் பகுதிகளில் பல சைவப் பெரியார்கள் தோன்றி பண்பாடு,கலாச்சாரம்,கல்வி,மதம் என்பவற்றை நிலை நிறுத்தும் வகையில் சைவப் பாடசாலைகளை அமைத்தனர்.

சங்கானையில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு சைவப் பாடசாலை ஒன்று இல்லையே என்பதனை உணர்ந்து மிகவும் கவலைப்பட்டவர் சைவப் பொறையும் சைவப் பற்றும் கொண்ட பெருவள்ளல் சரவணமுத்து சிவசம்பு அவர்கள். இப்பெரியார் 1928 ஆம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி தனது மூத்த மகனாகிய சிவப்பிரகாசம் என்பவருடைய பெயரே பாடசாலைக்கு பொருத்தம் என்பதனை உணர்ந்து அப்பெயரையே வைத்தார். எங்கும் பரந்துள்ள சிவம் பிரகாசிக்கும் இடமே சிவப்பிரகாச மாயிற்று. இவ்வகையில் பாடசாலை "சிவப்பிரகாச வித்தியாலயம்" எனும் பெயரைப் பெற்றது. இப்பாடசாலை சிறப்பாக இயங்குவதற்கு பிரசித்த நொத்தாரிசு திரு.க.ஐயாத்துரை அவர்கள் மூலம் தனக்குச் சொந்தமான 3 பரப்பு காணியையும் அதில் உள்ள கட்டடத்தையும் 1927ஆம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி தனது மூத்த மகனான சிவப்பிரகாசம் என்பவருடைய பெயரில் பாடசாலை இயங்குவதற்கு ஆவன செய்ததுடன் இரண்டு ஆசிரியர்களை தனது சொந்தச் செலவில் கற்பித்தலுக்கு நியமித்து கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிசெய்தார்.

1928ம் ஆண்டில் நிறுவப்பட்ட பாடசாலையை அரசாங்கத்தில் பதிவு செய்யும் வாய்ப்பின்றி சில காலம் தனது சொந்தச் செலவிலேயே நடத்தி வந்தார். கிறீஸ்தவ பாடசாலைகள் அன்றி சைவ பாடசாலைகள் அரசாங்கத்தில் பதிவு செய்யாதபடி கல்விச் சட்டங்கள் தடையாக இருந்தன. இத்தகைய சட்டங்களை எல்லாம் தடையாக தாண்டினார் எம் சமயப் பெரியார்.அதாவது சட்டசபை பிரதிநிதியாக இருந்த இந்துபோட்.சி.இராசரத்தினம் அவர்கள் இச்சட்டங்களையெல்லாம் உதறித்தள்ளி விட்டு எவ்விடத்திலும் சைவப் பாடசாலை

களை நிறுவவும் அவற்றை அரசாங்கத்தில் பதிவு செய்யவும் உதவி நன்கொடை பெறவும் வழி செய்யும் சட்டத்தை சட்டசபை மூலமாக நிறைவேற்றச் செய்தார்.

இச்செயற்பாடுகளை செவ்வனே செய்து முடிக்கும் வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் உதயமாயிற்று. தனிப்பட்ட சமயப் பெரியவர்களினால் நிறுவப்பட்ட பாடசாலைகளை சைவ வித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.அத்தோடு நின்றுவிடாது அரச உதவிகள், நன்கொடைகள் என்பனவும் கிடைக்க வழி செய்யப்பட்டது. இவ்வாறு சைவ வித்தியா விருத்திச் சங்கம் கையேற்ற பாடசாலைகளில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் ஒன்றாக விளங்கி வருகின்றது.

ஆரம்பத்தில் இது ஒரு தனியார் பாடசாலையாகத் திகழ்ந்திருப்பினும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தில் ஒப்படைக்கப்பட்ட பின் கனிஸ்ட பாடசாலையாக வளர்ச்சி நிலை கண்டது. ஆரம்பத்தில் ஏழு மாணவர்கள் கல்வி கற்றார்கள் எனவும் முதல் மாணாக்கராக திரு தம்பையா,சிவஞானம் விளங்கினர் என்றும் ஆசிரியராகவும் அதிபராகவும் திரு கு கார்த்திகேசு அவர்கள் கடமையாற்றி யுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

1961 ம் ஆண்டு அரசால் கொண்டு வரப்பட்ட பாடசாலைகள் தேசியமயமாக்கல் திட்டத்தின் படி அரசால் கையேற்கப்பட்டது. பின்னர் 1970 ம் ஆண்டளவில் இப்பாடசாலை மகா வித்தியாலயம் எனும் அந்தஸ்தை பெற்றமை குறிப்பிடக்கூடிய ஓர் விடயமாகும்.

தன்னலம் கருதாத சேவை மனப்பாங்கு கொண்ட அதிபர்களின் செயற் பாட்டினால் காலத்திற்கு காலம் இப்பாடசாலை மெருகூட்டப்பட்டு வளர்ந்து வருகின்றது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் பெற்ற சிறப்பான பெறுபேறுகளின் காரணமாக 03.06.1991இல் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த அதிபர்களின் நிர்வாக செயற்பாடுகளின் காரணமாக ஆசிரியர்களதும் மாணவர்களினதும் உத்வேம், ஊக்கம் என்பன அதிகரிக்கப்பட்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை என்பவற்றில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இங்கு கல்வி கற்ற மாணவர்களே மீண்டும் இப்பாடசாலைக்கு அதிபராகவும் ஆசிரியர்களாகவும் கடமைபுரிகின்ற தன்மை இதன் பெருமைக்கு மென்மேலும் வலுச் சேர்ப்பதாய் உள்ளது.

இன்று எமது பாடசாலை சங்கானைக் கல்விக்கோட்டத்தில் அதிகளவு மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக மட்டுமன்றி 50இற்கும் மேற்பட்ட ஆசிரியர் குழாத்தினரையும் கொண்டுள்ளது. உயர் பரீட்சைப் பெறுபேறுகளும் இணைபாடவிதானச் செயற்பாடுகளும் விளையாட்டுச் சாதனைகளும் பல்கலைக்கழக சாதனைகளும் எமது பாடசாலையின் பெயரை தேசிய மட்டம் வரை உச்சரிக்கச் செய்துள்ளது.

இனிவரும் காலங்களில் கட்டடங்களால் மெருகூட்டப்பட்டும் மனிதவள தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கிலும் பல சாதனைகளை நிலைநாட்டும் வகையிலும் மென்மேலும் வளர்ச்சிகாணும் என்பது யாவராலும் எளிதில் சிந்திக்கக் கூடியதொன்று எனலாம்.

# பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் பற்றி......

ஒரு பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு முன்னின்று உழைக்கும் முதன்மையான உழைப்பாளிகளைக் கொண்ட உன்னதமான சங்கம் பழைய மாணவர் என்றால் அது மிகையாகாது.

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு'**

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க எமக்கு கல்வியைப் புகட்டி, எம்மைப் பூரண மனிதன் என்ற வளர்ச்சி நிலைக்கு உயர்த்தி, எமது எதிர் காலத்தையே தீர்மானித்து அனுப்புகிறது பாடசாலை. நாம் பாடசாலையில் கல்வி கற்றும் காலத்திலேயே எமது எதிர் காலம் எப்படி அமைய வேண்டும் என்ற மகத்தான சிந்தனையை விதைத்து எம்மை உயர்வடையச் செய்கிறது பாடசாலை. இவ்வளப்பரிய சேவையை எமக்கு வழங்கும் பாடசாலையை மறக்க முடியுமா? "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்பதுபோல் எழுத்தறிவிக்கும் தெய்வங்கள் குடியிருக்கும் ஆலயத்தை நினைக்காமல் இருக்க முடியாது.

மாணவராகிய நாம் ஒவ்வொருவரும் பாடசாலைக்கு என்றும் கடமைப்பட்டவர்களா கவே உள்ளோம். நாம் வாழும் இவ்வுலகில் எம் ஒவ்வொரு செயற்பாட்டிலும் பாடசாலை யின் உதவி இல்லாதிருக்க முடியாது. எமது கல்வி முடிந்தது. இனி எமக்கும் பாடசாலைக்கும் தொடர்பு இல்லை என்று எந்த ஈனமுள்ள மாணவனும் கூறமுடியாது. பள்ளிப் பருவத்தில் பாடசாலை எமக்குச் செய்த சேவைக்கு பிரதி உதவி செய்ய பழையமாணவர் சங்கம் எமக்கு வழிகாட்டுகிறது.

இந்த வகையிலே 1990 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை எமது பாடசாலையயின் வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டது. அதுதான் பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம்.

இந்த வகையில் எமது பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவராகிய திரு.நா.முருகானந்தன் அவர்களின் முயற்சியில் தோற்றம் பெற்றதே இப்பழைய மாணவர் சங்கம. 1990 ஆம் ஆண்டு பெரிய புயலுக்குப் பின் தோன்றிய அமைதியாக எமது பிரதேசம் இருந்த காலம். எமது பாடசாலையில் க.பொ.த உயர் தரம் இல்லாத காலம். உயர்தரக் கல்வியை மேற்கொள்வதற் காக எமது மாணவர்கள் அயல் கிராம பிரபல பாடசாலைகளுக்குச் சென்ற காலம். அக்காலப் பகுதியிலே எமது பாடசாலையிலும் ஒரு பழையமாணவர் சங்கம் ஒன்றைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன், சேவை செய்யவேண்டும் என்ற அவா மேலோங்கியது. என்ன செய்வதென்று சிந்தித்தார். அப்போதுதான் பழையமாணவர் சங்கம ஒன்றை எமது பாடசாலையில் தொடங்கினால் என்ன என்ற கேள்வி அவரது உள்ளத்தில் எழுந்தது. உடனே அப்போதைய எமது பாடசாலையின் முதல்வராக இருந்த திரு.சா. சந்திரபாலன் அவர்களிடம் சென்று தனது யோசனையைத் தெரிவித்தார். அவர் உடனே புன்முறுவல் செய்து அவரது தோழில் ஒரு தட்டுத்தட்டி விட்டு நல்ல முயற்சி செய்யலாமே, இதைத்தான் நானும் எதிர் பார்த்திருந்தேன். எனவே அதற்கான முயற்சிகளைச் செய்யுமாறு கூறினார். அவர் எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களிடம் இது பற்றிக்

கூறி அவர்களையும், தனக்கு முன்னால் பாடசாலையில் கல்வி கற்று விலகிய பழைய மாணவர்களையும் தொடர்பு கொண்டு அவர்களையும் இணைத்து பத்திரிகையில் விளம்பரம் செய்து 1990.10.13 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை 4.00 மணிக்கு சிவசம்பு மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் தொடங்கியது. பல பழைய மாணவர்கள் அக்கூட்டத்திற்கு சமுகமளித் திருந்தனர். அதிபர் திரு.சா. சந்திரபாலன் அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்று எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தின் போசகராக பாடசாலையின் உப அதிபராக இருந்த திரு நவரத்தினம் அவர்களும், பொறுப்பாசிரியராக திரு.வே. முத்துலிங்கம் அசிரியர் அவர்களும், மேற்பார்வை ஆசிரியராக திரு.க. உபேந்திரன் ஆசிரியரும், செயற்படுவார்கள் என சந்திரபாலன் அதிபர் அவர்கள் கூறினார்.

முதலாவது பழையமாணவர் சங்க செயற்குழுவில்

தலைவர் : திரு. கனகராசா
உபதலைவர் : செல்வி சத்தியவதனி
செயலாளர் : செல்வன். நா. முருகானந்தன்
உப செயலாளர்:செல்வி ஜீவதயாபரி
பொருளாளர் : ப. பன்னனீர்செல்வம்

ஆகியோர் சபையோரால் தெரிவு செய்யப்பட்டதுடன் ஏழு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1990.10.13 தொடங்கிய பழையமாணவர் சங்கம் இன்று வரையும் பாடசாலை வளர்ச்சிக்காக பல அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றது. அன்று சிறுவர்களாகிய நாம் போட்ட விதை இன்று பெருவிருட்சமாக வளர்ந்து பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது. இவ் ஆண்டுடன் பழைய மாணவர் சங்கத்திற்கு அகவை 18 ஆகிறது. தனது சேவையை மேலும் பரவலடையச் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. எமது பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இன்றும், என்றும் பழைய மாணவர் சங்கம் திகழும் என்பது திண்மை.

- **வீட்டில் உள்ளவர்கள் விழிப்புடன் இருந்தால் திருடர்கள் வரமுடியாது. அதுபோல நீ எப்போதும் எச்சரிக்கையாக இருந்தால் தீய எண்ணங்கள் உன் மனத்துள் நுழைந்து அங்கேயுள்ள நல்ல எண்ணங்களைக் கொள்ளையிட்டுக்கொண்டு ஓடிட முடியாது.**
- **உன்னுடைய 'நான்' எனும் தன்மை மறந்து உனது ஜீவாத்மா பரமாத்மாவின் இடத்தில் லயமாகும்போதுதான் முத்தி உண்டாகும்.**
- **துஷ்டத்தனமுள்ள 'நான்' எனப்படுவது எது?**

  **அவர்கள் என்னை அறியாதவர்களா? என்னிடம் தேவைக்கு மேலாகப் பணம் இருக்கிறது. என்னைப் போன்ற தனவந்தன் எவனுமே இல்லை என்ற எண்ணமே ஆகும்.**
- **நீ சாந்தமாயும் சற்குணத்துடனும் இருக்க விரும்பினால் மானிட வர்க்கத்தாருடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் லட்சியம் செய்யாதே.**
- **நியாயமான விவேகம் இரண்டு விதமாகும். ஒன்று பிரித்துப் பார்ப்பது மற்றது சேர்த்துப் பார்ப்பது. முதலில் கூறப்பட்டது மனிதனை உலகத்திலிருந்து பிரமத்துள் அழைத்துச் செல்வது. இரண்டாவது மனிதன் பிரமத்துள் எப்படி பிரமமாகத் தோன்றுவது என்பதை அறிகிறான்.**
- **தயிர் வைத்திருந்த பாத்திரத்தில் பாலை ஊற்றினால் அது கெட்டுவிடும் ஆகையால் அதில் ஒருவரும் பால் ஊற்றி வைக்கமாட்டார்கள். அதேபோல் சாதாரண மாணவனுக்கு உயர்ந்த ஆத்ம உபதேசத்தைச் செய்தால் அவன் அதைக் கெடுத்துவிடுவான் என்று ஞானகுரு அவருக்கு உபதேசம் செய்யமாட்டார்.**

**-சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்**

# பழைய மாணவர் சங்கத்தின் கடந்தகால, நிகழ்காலச் செயற்பாடுகள்...

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பல நிர்வாக சங்கங்களைத் தன்னுள் அடக்கி வளர்ந்துவருகின்ற ஒரு சமுதாய அமைப்பாகவே இயங்கி வருகிறது. இத்தகைய நிர்வாக சங்கங்களில் ஒன்றாகவே எமது பழைய மாணவர் சங்கம் விளங்கி வருகிறது. பழைய மாணவர்களது உடல், உள வலிமையினால் நாளாந்தம் எமது சங்கம் புதுப் பொலிவும் புத்துணர்ச்சியும் பெற்று வருகின்றது. எமது சங்கம் பெற்றுக்கொண்ட புத்துணர்ச்சியின் விளைவாக பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தியும் வருகின்றது. இவையே பழைய மாணவர் சங்க செயற்பாடுகளாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளன.

எப்போது பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து பாடசாலையின் வளர்ச்சி கருதி, சமுதாயத்தின் உயர்ச்சி கருதி மாணவர்களின் எழுச்சி கருதி பல்வேறுபட்ட செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது. அவ்வகையில் எமது சங்கச் செயற்பாடுகளை எளிதில் வார்த்தையால் விபரிக்கவோ, சொற்களால் வர்ணிக்கவோ முடியாது. அவ்வகையில் எமது சங்கத்தின் பங்கும் பணியும் விசாலமானதும் பரந்துபட்டமையாகவும் விளங்குகின்றமையே எனலாம். இருப்பினும் எமது சங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட மறக்க மறைக்க முடியாத செயற்பாடுகளை நாம் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

- 1991 - 1995 வரையான காலப்பகுதியில் எமது பாடசாலையின் ஆசிரிய வெற்றிடத்தை உணர்ந்த எமது சங்கம் தொண்டர் ஆசிரியர் ஒருவரை நியமித்து அவருக்கான வேதனத்தையும் வழங்கியது.
- 1996 ஆம் ஆண்டு மைதான சீர்திருத்த வேலைகளுக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பினை நடாத்தி மைதானத்தினைச் செப்பனிட்டு சீர்செய்தமை.
- 1997ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மீண்டும் மைதானத்தை செப்பனிடுவதற்காக மாபெரும் கலைவிழா ஒன்றினை நடாத்தியமை.
- பாடசாலையிலே உள்ள நூலகத்தின் அபிவிருத்திக்காக உயர்தர மாணவர்களுடன் இணைந்து சாண்டோ எம்.துரைரத்தினத்தின் மாபெரும் வீரதீர சாகச நிகழ்வினை நடாத்தியமை.
- 1995ஆம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக பாடசாலை மதில் சேதமடைந்திருந்தது. ஆகையால் வேலி அமைத்துக் கொடுத்து பாடசாலையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியமை. மேலும் எமது பாடசாலையின் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெரும் இடையூறாக இருந்த சுற்றுமதில் இல்லாமையைக் கருத்தில் கொண்டு சுற்றுமதிலின் ஒரு பகுதியை அமைத்துத்தர முன்வந்தமை. அதற்கமைவாக மதில் கட்டுவதற்கான அனுமதிகளையும் பெற்றதோடு செலவீனங்களைக் குறைக்கும் நோக்கோடு கல் அறுவை, வேலி அகற்றல் போன்ற வேலைத்திட்டங்களை அனைத்து பழைய மாணவர்களின் ஒத்துழைப்போடும் செய்து முடித்தமை. இச்செயற்பாட்டில் 40 பழைய மாணவர்கள் பங்குகொண்டனர்.
- நீண்டகாலமாக பாவனையிலுள்ள எமது விளையாட்டு மைதானத்தை பாடசாலைக்கு உடமையாக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச செயலர், வலி

மேற்கு, சங்கானை அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அபிவிருத்திச் சங்கம் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- பாடசாலைக்கு புதிய கேற் ஒன்றினை அமைத்துக் கொடுத்தமை.
- 1999ஆம் ஆண்டு பழைய மாணவர்களின் முயற்சியினால் மாபெரும் கணனிக் கண்காட்சி நடாத்தப்பட்டது.
- 2000ஆம் ஆண்டு பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்பின் ஊடாகவும் அனுசரணையின் ஊடாகவும் விளையாட்டுப்போட்டி நடாத்தப்பட்டது.
- மாணவர்களின் அறிவினை விருத்தி செய்யும் முகமாக மேலதிக வகுப்புக்கள் பழைய மாணவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றமை.
- 1997ஆம் ஆண்டுதொடக்கம் இன்றுவரை எமது சங்கம் கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், காற்பந்தாட்டம், உடற்பயிற்சி, மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி முதலிய விளையாட்டுக்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி மாணவர்களின் விளையாட்டு வலிமையை மெருகூட்டியமை.

இத்தகைய எமது பழைய மாணவர்களின் ஊக்குவிப்பே தேசிய ரீதியில் எமது பாடசாலையின் பெயர் உச்சரிக்கப் படுவதற்கு அடிப்படைக் காரணமாகியது. அத்துடன் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் வரை பல சாதனைகள் நிலைநாட்டப்படுவதற்கு ஊக்கியாக அமைந்ததாகும்.

எமது பாடசாலையில் இருந்து மாகாணமட்டப் போட்டிக்கு பங்குபற்றிய மாணவர்கள் அனைவரையும் பாராட்டு முகமாக பாராட்டு விழா ஒன்றினை ஒழுங்குபடுத்திச் செய்தமை. அத்தோடு போட்டியில் பங்குபற்றிய ஒவ்வொரு வீரர்களுக்கும் அவர்களுக்கென்றே சொந்தமாக வெற்றிக் கிண்ணத்தை வழங்கியுள்ளது.

மேலும் போட்டிக் குழுக்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றிய போது ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியை (10,000 ரூபா) வழங்கியமை. போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரினதும் புகைப்படங்களை பத்திரிகையில் பிரசுரித்து அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தியமை.

- 1993 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் முதலாவது ஆசிரியர்தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் போது சங்கானை மல்லாகம் சந்தியிலிருந்து ஆசிரியர்களை மங்கள வாத்திய இசை ஒலிக்க ஊர்வலமாக வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டு வெகு விமர்சையாக அந்நிகழ்வு கொண்டாடப் பட்டதாகும்.
- மாணவர்களின் வளர்ச்சி நிலையில் எமது சங்கம் முழுக் கவனத்தையும் கொண்டுள்ளது. ஆகையினால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி, க.பொ. த(சாதாரண த)ர பரீட்சையில் சித்தி (10A), பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக சாதனைகள் என்பவற்றுக் கான பதக்கங்களையும் பரிசில்களையும் வழங்கி ஊக்குவித்து கௌரவித்து வருகின்றது.
- 2007ஆம் ஆண்டு முதல் தரம் 10 மாணவர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு பாடசாலையின் பரிசளிப்பு விழா அன்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

---

- **நான் கற்றவன், இன்னாருடைய மகன், நான் செல்வம் படைத்தவன், நான் கௌரவத்திற்கு உரியவன் இவை போன்ற உபாதிகள் மனிதன் ஒருவரிடமிருந்து அகன்று போகுமாகில் அவன் தெய்வத்தன்மை பெறுகிறான்.**

  -ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

- **சமநிலையிலிருந்து பிறழாதவன் சாந்தமானவன், நன்மையை ஆராய்ந்து ஏற்பவன், அமைதி படைத்தவன், இரக்கமும் அன்பும் பெரிதும் உள்ளவன் - இத்தகையவன் நல்ல பணிகளில் ஈடுபடுகிறான். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக்கொள்கின்றான்.**

  -சுவாமி விவேகானந்தர்

# பழைய மாணவர் சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள்...

எந்தவொரு நிறுவனங்களும்/ சங்கங்களும் தோன்றிய காலம் தொடக்கம் பல கொள்கைகளை தனக்குள் உள்ளடக்கிக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. எமது பழைய மாணவர்களது சிந்தனை எண்ணங் கள் நல்லனவாகையால் தாம் எண்ணிய வற்றைச் செயற்படுத்த துடித்தவண்ண முள்ளனர். இவையே எமது சங்கத்தின் எதிர்காலத் திட்டங்களாக உருப்பெறுகின்றன.

- பாடசாலைக்கு சுற்றுமதில் அமைத்தல்.
- பழைய மாணவர் சங்க அலுவலகம் ஒன்றினை அமைத்தல்.
- பாடசாலைக்கான விளையாட்டு நிதியம் ஒன்றினை ஆரம்பித்தல்.
- பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கான நிதியம் ஒன்றினை ஆரம்பித்தல்.
- வெளிநாடுகள் பழைய மாணவர் சங்கக் கிளைகளைத் தோற்றுவித்து நிர்வகித்தல்.
- பின்தங்கிய மாணவர்களை இனங்கண்டு மேலதிக வகுப்புக்களை நடாத்தி கல்வியில் அவர்களை ஊக்குவித்தல்.
- பாடசாலை நூலக அபிவிருத்திக்கு உதவுதல்.
- விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பு செய்தல்.
- விளையாட்டு உபகரணங்களை வழங்கி விளையாட்டுத் துறையை வளர்த் தெடுத்தல்.
- ஆயுட்கால அங்கத்தவர்களை அதிகரிப் பதன் ஊடாக சங்கச் செயற்பாட்டை விஸ்தரித்தல்.
- பழைய மாணவர் சங்கத்தின் ஸ்தாபக நன்நாளில் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வினை நடாத்துதல்.
- விஞ்ஞான ஆய்வுகூட அபிவிருத்திக்கு உதவுதல்.
- வெளிநாட்டு உதவிகளைப் பெற்று கணனிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- கணனி அறிவினை மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் தேவைப்படின் பெற்றோர்களுக்கும் வழங்குதல்.
- வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்து எதிர்கால வாழ்வினை வளம்படுத்துதல்.
- மாணவர் மத்தியிலே பொது அறிவு, சமய அறிவு, கணனி அறிவு, கலைத்திறன் செயற்பாடு என்பவற்றை ஏற்படுத்தி வளர்த்தெடுத்தல்.
- மாணவர் மத்தியில் கருத்தரங்குகளை நடாத்தி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி, க.பொ.த. (சாதாரண) தர பரீட்சை அதி திறமைச்சித்தி (10A), பல்கலைக்கழக அனுமதி, விளையாட்டுச் சாதனைகள் என்பவற்றுக்கு பதக்கங்களை வழங்கி ஊக்குவித்து கௌரவித்தல்.
- வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் பாடசாலைக்கு வரும் பட்சத்தில் கௌரவித்து சிறப்பித்தல்.
- வருடந்தோறும் ஆசிரியர்தின விழாவின் போது மரநடுகைத் திட்டத்தை அமுல்படுத்தல்.

என்ற வகையில் பழைய மாணவர்கள் மனங்களில் கருக்கொண்ட சிந்தனைகள் செயல்வடிவில் உருப்பெற இருக்கின்றன.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த சங்கம் வளரும் கால இடைவெளியில் பல இன்னல்களைக் கண்டு தளர்ந்துவிடவில்லை. எமது பழைய மாணவர்களின் ஒற்றுமையும், புரிந்துணர்வும், வெளிநாட்டு மாணவர்களின் கைகோர்ப்பும், அவர்களது உதவியும் எமது தளர்வற்ற நிலைக்கு வலிமை சேர்த்தன. இன்று தன்னிகரற்ற நிலையில் எமது சங்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றது. எமது பாடசாலை வளர்ச்சிக்காக பல வழிகளிலும் பங்களிப்பை ஆற்றியுள்ளது எனில் அதனை மறுக்க முடியாது. இனிவரும் காலங்களிலும் மேற்கூறப்பட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்தி அதனை பாடசாலையின் உயர்ச்சிக் கும் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் எமது பழைய மாணவர் சங்கம் துணையாக நிற்கும் என்பது எமது திண்ணம்.

- **குருவும் தெய்வமும் அருகில் இருக்கும்போது நம் வழிபாட்டிற்குரியவர் குருவே. ஏனெனில் தெய்வத்தைக் காட்டித்தருபவர் அவரே.**

  **-கபிர்தாசர்**

- **உசாவை சிறையெடுத்த அனுருத்தன் போலவும் சுபத்திரையை மணந்த அர்ச்சுனன் போலவும் எந்தத் தடைகளையும் வென்று ஒரு பெண்ணை மணம் முடித்துக்கொள்ள முடியுமானால் நீ அவளைத் துணிந்து காதலிக்கலாம். இல்லையேல் இவளைத்தான் மணக்கப்போகின்றோம் என்று தெரிந்து சீதையைக் காதலித்த இராமனைப்போல் உன் காதலும் இருக்கவேண்டும்.**

  **-கவியரசர் கண்ணதாசன்**

- **இல்லறம் என்பது காதலர் இருவரும் தம்மை மறந்து பிறரிடத்தில் செலுத்தும் அன்பாக வளர்கின்றது. கணவனும் மனைவியும் ஆகிய இருவரும் ஒருமனம் உடையவராய் உலக நன்மை கருதி வாழும் தன்மையே இல்லறம் ஆகும்.**
- **கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவரிடம் கொண்ட காதல் இல்வாழ்க்கையில் அன்பாய் பாயவேண்டும். அந்த அன்பு முதலில் பெருகுமிடம் தான் பெற்றுவளர்க்கும் குழந்தைகளிடமே. குழந்தைகள் தம் உயிரின் பகுதியாகவும், உடம்பின் பகுதியாகவும் பிறந்து வளர்வதால் பெற்றோர் தம் குழந்தைகளை தம் உயிர்போல் போற்றுகிறார்கள். தம் கண்போலக் காப்பாற்றுகிறார்கள். ஆதலால் தூய அன்பு பெருகுகிறது.**
- **தம்மையும் காத்து பிறரையும் காக்கவல்ல இல்லறத்தில் அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன்.**
- **இல்வாழ்க்கை என்பது காதலர் வாழ்க்கையே, காதலர் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் கரைந்து ஒருவர்க்காக ஒருவர் தியாகம் செய்து வாழ்வர். காதலர் இருவரும் ஒருமனப்பட்டு மக்கள் விருந்தினர் முதலானவர்களுக்காக தியாகம் செய்து வாழ்வர்.**

  **-டாக்டர் மு.வரதராசனார்**

யா/சங்கானை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

### திருக்குறளுக்கான முகவரிகள்

www.uts.cc.utexeas.edu
www.cs.utk.edu

### தமிழகராதிகளுக்கான முகவரிகள்

www.appoumline.com www.notam.uno.no
www.uni-koeln.de

### தமிழ் திரை உலகம் தொடர்பான முகவரிகள்

www.tamil poonga.com www.tamilthiral.com
www.welcome.to www.karthik.com
www.tamile.com
www.tamilmovie.com www.tamilstar.com
www.vijey.com

### சமூகம், பண்பாடு, சோதிடம் சார்ந்த முகவரிகள்

www.arularul.com
www.askcommander.com
www.astroinadia.com
www.astrologyindia.com
www.astropere.dictions.com
www.cyberastro.com www.panditiji.com
www.dushanshu.com www.astrology.net

### தமிழ் சினிமா தொடர்பான முகவரிகள்

www.aiuweb.org www.anutami.com
www.ignou.org www.kalvi.com
www.kanian.com www.tamiltilm.com
www.tamil meganet.com www.vanavil.com
www.tamilpadam.com www.thirai.com

### உடல் கூறுகள் பற்றிய தகவல்கள்

www.bortleby.com
என்சைகிளோபீடியா www.atlapedia.com

### தொலைக்காட்சிகள் பற்றிய தகவல்கள்

www.amazon.com www.cnn.com
www.rupavahini.lk www.jayathu.org
www.numtv.com www.rastvnet.com
www.sunnetwork.tv www.tami.org
www.swarnavahini.kl www.tv tami.com
www.tamilmw.tsn.org www.vijay.tv.com
www.distovery.com

◇ **மனிதர்கள் மலைதடுக்கி விழுவதில்லை. சின்னச்சின்ன கற்கள் தடுக்கிறே விழுகின்றனர்.**

# கணனியை பயன்படுத்துவோர் தெரிந்திருக்க வேண்டிய குறுக்குவழிகள்...

⊞ (Win key) இன் பாவனை பாவனை

- ⊞ Start menu ஐ தோற்றுவிக்க.
- ⊞+R Run டயலொக் பொக்ஸைப் கெற்றுக்கொள்ள.
- ⊞+M திறந்திருக்கும் வின்டோவை (window) Minimaze செய்க.
- ⊞+Shift+M → Minimaze ஆகியவற்றுக்கு window ஐ மீளப்பெற்றுக்கொள்ள.
- ⊞+F1 → windows இல் உதவியை (help) பெற
- ⊞+E → my computer ஐ பெற்றுக் கொள்ள
- ⊞+F → files and floders ஐ தேடுவதற்கு
- ⊞+Break → system proparties டயலக் பொக்ஸைப் பெறுவதற்கு
- ⊞+D → windows ஐ கணனித் திரையிலி ருந்து minimaze செய்வதற்கும், அதனை மீளப்பெற்றுக் கொள்வதற்கும்
- ⊞+Tab → Task bar உள்ள buttons ஐ தெரிவு செய்வதற்கு

Windows இல் பயன்படுத்தப்படும் பொதுவான Shortcuts

- F1 → Help ஐ தோன்றச் செய்ய
- F10 → Programme இன் Menu bar ஐத் தெரிவுசெய்ய.
- Shift + F10 Short cut menu ஐ தோன்றச்செய்ய.
- Ctrl+F4 Window ஐ Close செய்ய
- Ctrl+Esc Star+Menu ஐ தோன்றச்செய்ய
- Ctrl+C கொப்பி செய்ய
- Ctrl+x Cut செய்ய
- Ctrl+V Cut அல்லது Copy செய்தவற்றைப் Past செய்ய
- Ctrl+Z Undo
- Alt + F4 பயன்படுத்தும் Programme ஐ மூடுவதற்கு
- Alt+ Drop Down lisk box ஐத் திறக்க
- Alt+Under line letter குறிப்பிட்ட Menu ஐத் திறக்க அல்லது டயலொக் பொக்சில் குறிப்பிட்ட Button ஐத் தொழிற்படச் செய்ய.

MS Word இல் பயன்படுத்தப்படும் Shortcuts

- MS Word இல் பயன்படுத்தப்படும் Short cuts
- Ctrl + A Document + முடுவதையும் Slect செய்ய
- Ctrl+B Bole செய்ய
- Ctrl+C Copy செய்ய
- Ctrl+D Font டயலொக்பொக்சைத் திறக்க
- Ctrl + E Centre Alignment ஐத் தெரிவுசெய்ய
- Ctrl + F Find and Replace டயலொக் பொக்சை தோன்றச்செய்ய
- Ctrl + G Goto டயலொக்கொக்சை தோன்றச்செய்ய
- Ctrl + H Replace டயலொக்கொக்சை தோன்றச்செய்ய
- Ctrl+I Itlaic வடிவைத் தெரிவுசெய்ய
- Ctrl+J Junsify வடிவைத் தெரிவுசெய்ய
- Ctrl+K Hyperlink இன்சேற் செய்ய
- Ctrl+L Left Alignment ஐத் தெரிவுசெய்ய
- Ctrl + R Right Alignment ஐத் தெரிவுசெய்ய
- Ctrl+N New Document ஐத் திறக்க

- Ctrl + O Open டயலொக்கொக்சைத் திறக்க
- Ctrl + P Print டயலொக்கொக்சைத் திறக்கச்செய்ய
- Ctrl + S Save செய்ய
- Ctrl + T Left Indent செய்வதற்கு
- Ctrl + U கீழ்கோடு (Underling) இடுவதற்கு
- Ctrl + V Cut அல்லது Copy செய்தவற்றை Past செய்ய
- Ctrl + W Document Window ஐ Close செய்ய
- Ctrl + X Cut செய்ய
- Ctrl + Y Redo செய்ய
- Ctrl + Z Undo செய்ய
- Ctrl + 1 Single line இடைவெளி இடுவதற்கு
- Ctrl + 2 Double line இடைவெளி விடுவதற்கு
- Ctrl + 5 1.5 line இடைவெளி வருவதற்கு
- Ctrl + F2 Print Preview பார்ப்பதற்கு
- Ctrl + F4 Window ஐ Close செய்ய
- Alt + F4 Programm ஒன்றை Close செய்ய
- Alt + F7 Spell Check செய்வதற்கு
- Alt + F8 Micro டயலொக் பொக்ஸை தோன்றச்செய்ய
- Alt + 5 Document Restore செய்ய
- Alt + F10 Document ஐ Restore அல்லது Maximize செய்ய
- Ctrl + End Document இன் இறுதிக்கு கேசரைக் கொண்டுசெல்ல
- Ctrl + Home Document இன் ஆரம்பத்திற்கு கேசரைக் கொண்டுசெல்ல
- Ctrl + Shift + F Font ஐ மாற்றுவதற்கு
- Ctrl + Shift + L Bullets ஐக் கொண்டுவர
- Ctrl + Shift + P Font இன் அளவை மாற்றுவதற்கு
- Ctrl + [ Font size ஐக் கூட்ட
- Ctrl + ] Font size ஐக் குறைக்க

## Ms Excel இல் பயன்படுத்தப்படும் Shortcuts

- Ctrl + A Work sheet முழுவதையும் Slelct செய்ய
- Ctrl + B Bold செய்ய
- Ctrl + C Copy செய்ய
- Ctrl + F Find டயலொக்க் பொக்ஸைத் திறக்க
- Ctrl + G Goto டயலொக் பொக்ஸைத் திறக்க
- Ctrl + H Replace டயலொக் பொக்சைத் திறக்க
- Ctrl + I Italic தெரிவுசெய்ய
- Ctrl + K Hyperlink ஐ இன்சேட் செய்ய
- Ctrl + O Open டயலொக்பொக்சைத் திறக்க
- Ctrl + N New work sheet ஐத் திறக்க
- Ctrl + P Print டயலொக்பொக்சைத் திறக்க
- Ctrl + U Underline தெரிவுசெய்ய
- Ctrl + V cut அல்லது copy செய்தவற்றை past செய்ய
- Ctrl + X cut செய்ய
- Ctrl + Y Redo செய்ய
- Ctrl + Z Undo செய்ய
- Ctrl + 0 (zero) Columns ஐ Hide செய்ய
- Ctrl + 1 Format cell டயலொக் பொக்சைத் திறக்க
- Ctrl + 9 Rows ஐ Hide செய்ய
- Ctrl + ; திகதியை Insert செய்ய
- Ctrl + Space ber Column முழுவதையும் Select செய்ய
- Ctrl + Page up Work book இல் இப்போதுள்ள worksheet இல் இருந்து முன்னுள்ள work sheet இற்கு செல்ல
- Ctrl + Page down Work book இல் இப்போதுள்ள worksheet இல் இருந்து அடுத்துள்ள work sheet இற்கு செல்ல
- Alt + ? Style டயலொக்க் பொக்ஸைத் தோன்றச்செய்ய
- Alt + = Sutosum Function ஐ Insert செய்ய
- Alt + Shift + Rpws, Column போன்றவற்றை Ungroup செய்ய
- Alt + Shift + Rows, Column போன்றவற்றை Group செய்ய
- Ctrl + Shift + ! Number Format இற்கு மாற்றுவதற்கு
- Ctrl + Shift + # நாள், மாதம், ஆண்டு என்ற வடிவில் திகதியை இடுவதற்கு
- Ctrl + Shift + % வீத குறியீட்டை இட
- Ctrl + Shift + : நேரத்தை என்ரர் செய்ய
- F2 Active cell edit செய்ய
- F7 Spelling Grammar டயலொக்க் பொக்ஸைத் திறக்க
- F12 Save As டயலொக்க் பொக்ஸைத் தோன்றச்செய்ய

- Ctrl + Shift + + வெற்று Cell களை Insert செய்ய
- Shift + F3 Function டயலொக்க் பொக்ஸைத் திறக்க
- Shift + F11 புது Work sheet ஒன்றை Insert செய்ய
- Shift + இடது பக்கமாக ஒரு Cell ஐ Select செய்ய
- Shift + வலது பக்கமாக ஒரு Cell ஐ Select செய்ய

## Pagemaker இல் பயன்படுத்தப்படும் Short cut keys

- Ctrl + N புதிய பக்கம் ஒன்றை உருவாக்க
- Ctrl + A Open டயலொக்க் பொக்ஸைத் திறக்க
- Ctrl + W வேலைசெய்யும் File ஐ மூட
- Ctrl + D Place டயலொக்க் பொக்ஸைப் பெற
- Ctrl + Shift + D Link டயலொக் பொக்ஸைத் திறக்க
- Ctrl + P Print செய்ய
- Ctrl + Q Page maker ஐ மூட
- Ctrl + Z Undo செய்ய
- Ctrl + X Cut செய்ய
- Ctrl + C Copy செய்ய
- Ctrl + V Cut or copy செய்தவற்றை past செய்ய
- Ctrl + A எல்லாவற்றையும் Select செய்ய
- Ctrl + ; Add index Entry டயலொக் பொக்ஸைத் திறக்க
- Ctrl + 0 100% view பெற
- Ctrl + 5 50% view பெற
- Ctrl + 1 உண்மையான view ஐப் பெற
- Ctrl + Z 200% view பெற
- Ctrl + R Ruler ஐப் பெற
- Ctrl + Shift + புதியபக்கம் ஒன்றை Insert செய்ய
- Ctrl + Shift + B Bole செய்ய
- Ctrl + Shift + U அடிக்கோடு இட
- Ctrl + Shift + S தெரிவுசெய்ய எழுத்துக்களின் நடுவில் கோடு இட
- Ctrl + Shift + V தெரிவுசெய்த எழுத்துக்கள் Reverse செய்ய
- Ctrl + Shift + I Italic செய்ய
- Ctrl + T Type specfication டயலொக் பொக்ஸைத் திறக்க
- Ctrl + M Pragraph Specification டயலொக் பொக்ஸைத் திறக்க
- Ctrl + I Indents / Tabs பெற
- Ctrl + Shift + L எழுத்துக்களை வலப்புறமாக ஒழுங்குபடுத்த
- Ctrl + Shift + R எழுத்துக்களை இடப்புறமாக ஒழுங்குபடுத்த
- Ctrl + Shift + C எழுத்துக்களை மத்திய பகுதிக்கு ஒழுங்குபடுத்த
- Ctrl + Shift + J எழுத்துக்கள் Justify செய்ய
- Ctrl + Shift + F எழுத்துக்கள் Force Justify செய்ய
- Ctrl + 3 Definc styles டயலொக் பொக்ஸைப் பெற
- Ctrl + 6 Most செய்ய
- Ctrl + 7 Conmast செய்ய
- Ctrl + 8 Bring Foruord செய்ய
- Ctrl + 9 Send backround செய்ய
- Ctrl + B Send to back
- Ctrl + F Bring to front
- Ctrl + G Group செய்ய
- Ctrl + U Ungroup செய்ய
- Ctrl + L Lock செய்ய
- Ctrl + Y Styles டயலொக் பொக்ஸைத் திறக்க
- 

Ctrl + K Colours டயலொக் பொக்ஸைத் திறக்க

Ctrl + ' Control Palette பெற

Ctrl + F9 Script டயலொக் பொக்ஸைத் திறக்க

Ctrl + H Master Page

Ctrl + Shift +> எழுத்துக்களைப் பெரிதாக்க

Ctrl + Shift +< எழுத்துக்களைச் சிறிதாக்க

Ctrl + Shift + \ Super script செய்ய

Ctrl + \ Sub script

Ctrl + F3 Fill and line டயலொக் பொக்ஸைத் திறக்க

Ctrl + Shift + W Enter paster board பெற

Ctrl Backspack எழுத்துக்களிற்கு இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க

# JAVA

**CIVIL ENGINEERING CONSTRUCTION**

Mobile: 0777 283600
0779 590500
e-mail:javaconstruction1998@yahoo.com
manirajqn@yahoo.com

No 12, Yamuna Road,
Nallur, Jaffna.

**Mr.S.Manirajah** (Director)



# JAVA

**CIVIL ENGINEERING CONSTRUCTION**

ஜமுனா வீதி
நல்லூர்

மலர் சிறக்க வாழ்த்துவோர்

# கருணா கிளினிக்

Main street
Chankanai
Jaffna

பிரதான வீதி
சங்கானை



மலர் சிறக்க வாழ்த்துவோர்



வாழ்த்து மடல்கள் தெய்வப் படங்கள் மற்றும்
அந்தியேட்டிபோட்டோக்கள் என்பவற்றை தரமான
முறையில் நவீன முறையில்
பிரேம் செய்து பெற்றுக் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

# மனோன்மணி படமாடம்



Main street
Chankanai
Jaffna

பிரதான வீதி
சங்கானை

மலர் சிறப்புடன் மலர வாழ்த்துவோர்

# கிருஸ்ணா புடைவையகம்



திருமண மற்றும் முகூர்த்த பட்டும்
புடைவைகளையும் சிறுவர்
சிறுமியருக்கான ஆடைகளையும்
எண்ணற்ற ரகங்களில்
உங்கள் எண்ணம் போல்
தெரிவு செய்திட ஐவுளி
உலகின் நவீன முன்னோடி

Main street
Chankanai
Jaffna

பிரதான வீதி
சங்கானை

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

# விதுஷா கிறீம் கவுஸ்



புருட்சலட், ஐஸ்கிறீம், கேக், ஸ்பெசல்
நட்ஸ் ஐஸ்கிறீம், கேக், வடை, றோல்ஸ் மற்றும்
அனைத்து வகையான சோட்டீஸ்
வகைகளையும் தரமாக
பெற்றுக்கொள்ள







விதுஷா கிறீம் கவுஸ்

Main street
Chankanai
Jaffna

பிரதான வீதி
சங்கானை

மலர் சிறக்க வாழ்த்துவோர்

## கிருஸ்ணா ஸ்ரோஸ்

பிஸ்கட் வகைகள், பால்மா வகைகள்,

மற்றும் சகல விதமான பலசரக்கு பொருட்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்





## கிருஸ்ணா ஸ்ரோஸ்

Main street
Chankanai
Jaffna

பிரதான வீதி
சங்கானை

---

மலர் சிறக்க வாழ்த்துவோர்



## உதயா வெதும்பகம்

பாண் பிஸ்கட் கேக் சோடா
என்பனவற்றை தரமான
சுவையாகவும்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்



## உதயா வெதுப்பகம்

வல்லை வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Vallai road
Chankanai
Jaffna

---

மலர் சிறக்க வாழ்த்துவோர்

## உதயன் காட்வெயர்

அனைத்து வகையான காட்வெயர்
பொருட்களையும் மலிவான
விலையில்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

## உதயன் காட்வெயர்

பிரதான வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Main street
Chankanai
Jaffna

**செல்வி. ரா. அரங்கா**
(பழைய மாணவி)
முதலாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சிவப்பிரகாசமும் பழைய மாணவரும்...

சங்கை நகர்...
அகழ்ந்தெடுத்த சிவப்பிரகாசமும் - தமிழ்
சங்கமெல்லாம் பரப்பும் மகவுகளின் தேசம்...

கவலைகள் தெரியாமல்...
கன்னிமகள் எமை வளர்க்க...
கலைகளெல்லாம் நாங்கள் பெற்றோம்
கலையவில்லை நினைவுகள்...
உலை கொதிக்கும் போல் மனது
உருக்கமுடன் ஏங்குது...
விலையில்லாத பள்ளி வாழ்க்கை,
நிலையில்லாமல் போனதேனோ...?
ஊடல் கொண்ட காதலியாய்...
உள்ளூரம் நீயிருக்க...
உன்னை காதலித்தே நாம் சாவோம் - இனி
கவலை எமக்கில்லை...

அவள்மீது நாம் கொண்ட காதலினால்...
எம்மீது அவள் கொண்ட நம்பிக்கை காக்க...
சிற்பிகளாய் நாமானோம் - அவளை
மறக்காமல் மிளிர வைத்தோம்...
வர்ணப் புடவை கட்டி அழகு செய்தோம் - அவளின்
வர்ணங்கள் கலையாமல் மலர்கள் வைத்தோம்...
கண்டவரை உயிரை வாங்கும் சாயல் கொண்டதால்
அவளின் கள்ளழகு தெரியாமல் சுவர்கள் வைத்தோம்...

எங்கள் வீராப்பு தெரியும் வண்ணம்
விளையாட்டுப் போட்டி...
பிள்ளைகள் பாராட்டுப் பெறவும் - நல்ல
பரிசளிப்பு விழாவென - இணைந்து
நாங்கள் செய்தவையெல்லாம்...
இளையவளின் நெஞ்சிலிக்கும்...
அவளின்...
உடுத்த புடவை கலையாமல்...
அடுத்த நாட்டிலிருந்து எம்மலர் உதவ...
நெடுத்த வீதியில் - அவள்
மிடுக்கோடு வாழும் பரவசம் தான் என்ன...?
வடித்த கலையாய் அவளைச் செதுக்கி...
குடித்துவிட்டோம் - எம்மை
படிக்க வைத்தவள் அவளல்லவா...?

அன்னையே...
நாங்கள் நெருப்பில் பிறந்தவர்கள்...
எம்மை யாரும் சுட்டெரிக்க முடியாது...
இது எம் உறவுகள் கொண்ட...
உன்னதத் தோழமை...
இதை வலிந்து பார்ப்பதற்கு வரலாறால் முடியாது...
திரும்பிப் பார்க்கட்டும் சங்கை நகர்...
சிவப்பிரகாசத்தின் சீறிப்பாயும் வேங்கைகள் நாம்...
வாழ்க்கைச் சோலையில் - எமக்கு
வாலிபம் முளைக்க வைத்தவளே - உனக்காய்
காவியம் படைக்க காத்துக் கிடக்கின்றோம்...
அன்னையே...
நாம் உயிர் விடும் போதும் - உன்
மடி அதனைத் தாங்கட்டும்...
எங்கள் மூச்சுள்ளவரை...
உனக்காய் நாமும்...
எமக்காய் நீயும்...
இது மட்டும் போதும் - பள்ளியே
நீ எமக்குத் தந்த பரிசாய்...

திரு. சி. ரமணராஜா B.A (Hons)
உபதலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச.ம.வி.

# நாம் பாதுகாக்கவேண்டிய சொத்துக்கள் எம் முதியோரே...!

"முதியோர் ஒருவர் இறப்பது ஒரு பெரிய நூலகம் எரிவதற்கு ஒப்பானது" என்பது ஆபிரிக்க நாட்டுப் பழமொழி ஆகும். மனிதன் ஆறறிவு படைத்த ஜீவனாக பேசுகின்ற விலங்காக, புன்னகை சிந்தும் மனிதனாக விளங்குகின்றான். அவன் தன்னுடைய சிந்தனையிலே உதித்த எண்ணங்களை மொழியினால் வெளிப்படுத்தும் ஆற்றலுடையவன். இதயத்திலிருந்து மேலெழும் கருத்துக்களை எழுத்துக்களிலே பதிக்க வல்லவன். இறைவனால் மனிதனுக்கு மட்டும் வழங்கப்பட்ட மகத்துவமே இதுவாகும். மனிதன் எல்லாம் அறிந்தவன். ஆனால் மனிதனாக வாழமட்டும் அவனுக்கு ஏனோ தெரியவில்லை. இதனை

"மனிதன் எல்லாம் தெரிந்துகொண்டான்
வாழும் வகை புரிந்துகொண்டான்
இருந்தபோதும் ஒன்றுமட்டும்
அவனுக்கு இன்னும் தெரியவில்லை
மனிதனாக வாழமட்டும்
அவனுக்கு இன்னும் தெரியவில்லை"

என்கிறார் கவியரசர் கண்ணதாசன். முதியவர்கள் சமூகத்தின் சொத்துக்கள். நடமாடும் அனுபவ இயந்திரங்கள். இவர்களே இன்றைய இளம் சந்ததியினருக்கு அறிவும் ஞானமும் வழங்கும் அறிவின் இருப்பிடங்கள். மனிதனின் குழந்தைப் பருவம் வளர்ந்து முதுமை அடையும் போது அங்கு பல படிவுகள் ஏற்படுகின்றன. அவையே முதியவர்களின் அனுபவங்களாகவும் அறிவாகவும் ஆளுமைகளாகவும் சிந்தனாசக்திகளாகவும் வெளிப்படுகின்றன. எமது இன்றைய சமூகம் ஏனோ இவ் அனுபவ அறிவையும் அவர்களின் முதிர்ந்த கருத்துக்களையும் நல்வழி காட்டல்களையும் முதியவர்களிடமிருந்து இலகுவாக பெறுவதற்கான வாய்ப்புக்கள் வழிகள் இருந்தும் அவற்றைப்பெற தவறிநிற்கின்றனர். மாறாக முதியவர்களுடைய அனுபவ அறிவினை அதாவது பட்டறிவினை நாம் சரியாகப் பெற்று பயன்படுத்திக் கொள்வது எமது வாழ்வில் எமக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஆகவே முதியவர்கள் மனித குலத்தின் சொத்துக்கள். அவர்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவகளே தவிர புறந்தள்ளப்படுவதற்கு உரியவர்கள் அல்லர்.

நாம் 21ஆம் நூற்றாண்டிலே கணனி யுகத்திலே அளப்பரிய சாதனைகளுடன் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறோம். எனினும் நாடளாவிய ரீதியில் சில பிரச்சனைகள் நாள்தோறும் பெருகி நிம்மதியற்ற வாழ்வினை ஏற்படுத்திவிடுகின்றன. இன்று உலகத்திலுள்ள பிரச்சனைகளுள் ஓர் பிரச்சனையாக முதியவர்களின் இன்றைய நிலை காணக்கிடக்கின்றது. அது கவலைக்குரிய விடயமாக உள்ளது.

### முதியோர் தனிமைப்படுத்தப்படுவதற்கான காரணங்களும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும்

21ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தடம்பதித்து சென்றுகொண்டிருக்கின்ற வேளையிலே இன்றைய சமூகம் முக்கியமாக எதிர்நோக்கும் பிரச்சனை முதியவர் சமூகத்திலிருந்து ஒதுக்கிவிடப்படுதல் ஆகும். இது நம்நாட்டில் மட்டுமன்றி உலகெங்கிலும் பொதுவாகவே உள்ளது. அண்மையில் முதியவர்களைப் பேணாமை சட்டபூர்மான குற்றமாகக் கருதப்பட்டு அதற்கான தண்டனை வரையறுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்விடயம் துயரத்திற்குரிய

செயற்பாடாகும். பெற்றவர்களைப் பேணுவதற்கும் சட்டம் ஒன்று தேவைதானா? என்ற இழிநிலைக்கு இன்றைய இளம் சந்ததியினர் தள்ளப்பட்டிருக்கின்ற தன்மையானது வேதனையைத் தரும் ஒரு விடயமாகும். இவ்வகையில் நோக்குமிடத்து முதியவர் கைவிடப்படுவதற்கான காரணங் களை பின்வருமாறு கண்டறியலாம்.

இன்றைய காலம் மனிதன் இயந்திரங்களோடு இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் காலமாகும். அவசர உலகிலே பரவசமாக உல்லாசமாக இயற்கையை இரசிக்கத்தெரிந்த மனிதன் தன் குடும்பத்தாருடன் பாசத்துடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்குக் கூட நேரத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் வாழ்வு ஓய்வாகி தம் பிள்ளைகளின் முகம் பார்த்து அவர் தயவில் வாழ்கின்ற முதியவர்களின் நலம்கேட்கக்கூட அவனுக்கு நேரம் இல்லை. இதனால் முதியவர்கள் உடல், உள நெருக்கடிகளுக்கு ஆளாகலாம்.

முதியவர்கள் தனிமைப்படுத்தப்படுவதற்கு பொருளாதார நெருக்கடியும் முக்கிய காரணம் எனலாம். அதாவது சனத்தொகைப் பெருக்கம் சொல்லமுடியாத வேகத்தில் விரைவாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. மனிதனுடைய நாளாந்த தேவைகளும் செலவுகளும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அத்துடன் வறுமை ஒருபுறம் இருக்க வேலையில்லாத் திண்டாட்டம் மறுபுறமாகக் காணப்பட இன்றைய இளம் சமுதாயம் சுமையே வாழ்வென அல்லது வாழ்வே சுமையென தள்ளாடி நடக்கின்றது. இளமை நிலையில்லாதது. ஆகவே முதுமையில் நோய்களையும் அதன் வலிகளையும் காவி நிற்கின்றது. ஆகவே தாம் தங்கி வாழ்கின்ற குடும்பத்தில் மேலதிக செலவாக மருத்துவச் செலவு அமைந்துவிடுகின்ற தன்மை அதிகமானவர்களால் தாங்கமுடியவில்லை. இவ்வகையில் உடல் உபாதைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பின்மை காணப்படும் வேளை முதியவர் ஒருவர் உள நெருக்கடிக்கு ஆளாகலாம். ஆகையால் அவர் விரக்தியுடனும் வேதனையுடனும் தம் வாழ்க்கையை ஏனையவரிடமிருந்து தவிர்க்கவும் ஒதுங்கி வாழவும் முனைந்துகொள்ளலாம்.

இன்று நாகரிக மோகத்தின் பாதகச் சின்னமாக முதியவர்களைக் கருதுவோரும் உண்டு. இளமை துள்ளி எழுந்துநின்று அலைமோதும் பருவத்திலே நிலையான வாழ்வினைத் தேடிட வேண்டுமென நினைப்பவர் முதியவரின் வார்த்தைகளை அமிர்தமென எண்ணி அவற்றைப் பின்பற்றுதல் வேண்டும். மாறாக இளம் பருவத்தில் இருப்பவர்களுக்கு முதியவர்களுடைய வார்த்தைகள் "புறுபுறுப்பாக", "நச்சரிப்பாக", "முணுமுணுப்பாக", "விசர்க்கதைகளாக" தோன்றுகின்றது. இம்மனப்பாங்கு சமூகத்திலிருந்து களையப்பட வேண்டிய ஒன்றாகும். வயது வந்தவர்கள் முதியோரில் காட்டுகின்ற அலட்சியத்தை குழந்தைகள் அவதானித்து தாமும் அவற்றைச் செய்ய முற்படுகின்றன. இச்செயற்பாடு அவர்களுக்கு தம்மை அனைவரும் புறக்கணிப்பதாக ஓர் மனநிலை தோன்றுகின்றதாகும்.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளினால் இளைய தலைமுறையினர் வெளிநாடுகளுக்கு புலம்பெயரவும், இடம்பெயரவும் வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்வகையில் பெற்றவர்களை பல மைல்களுக்கு அப்பால் அனுப்பிவிட்டு அவர்களுடைய வாழ்வே தம் வாழ்வென இருக்கும் முதியவர்கள் தம் பிள்ளைகளின் புகைப்படங்களை தம் மங்கிப்போன கண்களால் கூர்ந்து பார்ப்பதையே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற போது அதனால் உள நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர்.

அத்துடன் போரின் விளைவுகளும் அதன் வலிகளும் இளப்புக்களும் வேதனைகளும் முதியவர்களின் உடல் உள நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி உள்ளது. இவ்வேளை வலிமையற்ற முதியோரின் மனதிற்கு ஆறுதல் வார்த்தைகள் கூற வளர்த்த பிள்ளைகள் அருகில் இல்லை. இந்நிலை எமது பிரதேசத்தில் உள்ள சாபக்கேடாக உள்ளது.

முதியவர்கள் நோயினால் வேதனைப்படும் போது அதன் வேதனைகளைத் தாங்கும் பிள்ளைகள் எத்தனைபேர்? தம்மைப் பெற்றவர்களை முகம் கோணாது கருணையோடு பராமரிப்பவர்கள் எத்தனைபேர்?

அவர்களுக்கு வருகின்ற துன்ப துயரங்களில் பங்குகொள்வோர் எத்தனைபேர்? அவர்களு டைய கருத்துக்களைக் கேட்டு அவர்களு டைய வழிகளிலே பயணிப்பவர்கள் எத்தனை பேர்? அவர்கள் கருத்துக்களை அமிர்தமாக ஏற்றுக்கொள்வோர் எத்தனைபேர்? அவர்களை நையாண்டி எனும் பெயரில் சேஷ்டை புரிவதைத் தவிர்ப்பவர்கள் எத்தனைபேர்? இக்காரணங்கள் முதியவர்கள் சமூகத் திலிருந்து தாமாகவே ஒதுங்கும் நிலையினை ஏற்படுத்துகின்றன.

சமூகத்தில் முதியவர் இல்லங்கள் அதிகமாக முளைத்துள்ளன. தம் பிள்ளைகளுடன் அருகிலிருந்து பல கனவுகளையும் இலட்சியங்களையும் சுமந்து அடிக்கடி கனிவான வார்த்தைகளைக் கூறிய அந்த பெற்றோர்கள் தனியான ஓர் வாழ்வினைத் தொடர வேண்டுமா? இந்த அவல நிலைதான் முதியவர் இல்லங்கள் தோன்றுவதற்கு காரணமாகின்றன. பிள்ளை களின் சிந்தனை யாதெனில் "முதியோர் இல்லம்" இருக்கிறதுதானே. எனவே அங்கே இவர்களைத் தங்கவைத்தால் எல்லாவற்றுக் கும் நல்லது என எண்ணுகின்றார்கள். ஆகவே முதியோர் இல்லங்களில் அவர்களை சேர்ப்பிக்கிறார்கள. அவ்வில்லங்களில் முதியவர்கள் பிள்ளைகளின் ஏக்கங்களுடன் அன்றாட வாழ்வினை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு கொண்டுபோய் முதியவர்கள் இல்லங்களில் சேர்க்கும் அப்பிள்ளைகள் ஒன்றைமட்டும் நினைக்க மறக்கிறார்கள். "தாம் தமது பெற்றோர்களுக்குச் செய்யும் இத்தகைய பாதகச் செயலை தம் பிள்ளைகளும் தமக்குச் செய்யும்" என்பதே அதுவாகும்.

இன்று முதியவர்களும் அநாதைகளாக உதவிக்கு யாருமற்ற பாவிகளாகப் பேதலித்து நிற்கின்றனர். முதியவர்கள் அநாதைகளாக அலைவீசித்திரிய பிள்ளைகள் சொகுசான வாழ்வினை ஓரிடத்திலே மேற்கொண்டிருக் கின்ற இச்செயலையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

**இன்றைய இளம் தலைமுறையினருக்கு...**

"உனக்கு நன்மை உண்டாகி இருப்பதற்காக
முதிர்ந்த வயதுள்ளோர் முகத்தைக் கனம்பண்ணுவாயாக..."

இன்றைய இளம் தலைமுறை யினரே நாட்டின் நாளைய தலைவர்கள் என்பர். இளமை, செல்வம், யாக்கை என்பன நிலையில்லாதன. இதனை இன்றைய சமூகம் ஏனோ சிந்திக்க மறுக்கின்றது. "வானத்தில் ஏறி விண்ணையும் சாறிடும்" வாலிபத்தினர் தமக்கும் முதுமை நிலை வரும் என்பதை உணர்ந்து அவர்களைத் தனிமைப்படுத் துவதைத் தவிர்த்து அவர்களுக்கு உதவத் தயாராக வேண்டும். "பழசு" எனப் பகிடிவிட்டு வயதான முதிர்ந்தவர்களோடு சேஷ்டை புரிந்து அவர்களைச் சினங்கொள்ள வைப்பதைத் தவிர்த்துக்கொள்வது தலையாய கடமையாகும். எனவே பாய்ந்து வருகின்ற புது வெள்ளங்களாக இருக்கும் இளம் தலைமுறையினரே! நீங்கள் தேங்கி நிற்கின்ற குட்டைகளாக முதியவர்களைக் கருதாது அவர்களைக் கனம் பண்ணுவீர்களாக. அவர்கள் அனுபவசாலிகள். பட்டறிவுடையவர் கள். முள்ளிலும் கல்லிலும் நடந்தவர்கள். மேடு பள்ளங்களைக் கடந்தவர்கள். நன்மை தீமையை உணர்ந்தவர்கள். விருப்பு வெறுப்பை அறிந்தவர்கள். ஆகவே அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் அமிர்தமானவை. எனவே அவ்வார்த்தைகளை நாம் உதாசீனப்படுத்தாது அவர்கள் காட்டிய பாதைகளிலே அவர்களின் சொற்களைக் கேட்டு அவர்களை மதித்து போற்றி நேரிய வழியிலே பயணிப்போமாக...!

இந்த உலகத்தில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. இவ்வாறு பயன் கருதாது பணிபுரிகையில் உனது செயல்கள் உன்னைப் பற்றமாட்டாது. விடுதலை பெறுவதற்கு உள்ள வழி இதுவே.

திரு.அ.மயூரன் B.F.A.
உபசெயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச.ம.வி.

# பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் வாழ்வும், கலையும்...

பிரான்ஸ்சிஸ்கோ கோயா மனாரதிய வாதிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தார். இவரது கலைப் படைப்புக்கள் மனித உரிமை, போர், போரின் கொடுமை, சுதந்திரம் இல்லை போன்ற கருத்துக்களை வெளிப்படுத்துவன வாக உள்ளன. நுணுக்கமாக கருத்துக்களை வெளிப்படுத்துபவராக இவர் விளங்குகின்றார். பிரான்ஸ்சிஸ்கோ கோயா ஒரு கலைஞர் மட்டுமல்லாது எழுத்தாளராகவும் விமர்சகராகவும் திறனாய்வாளராகவும் அறிஞராகவும் திகழ்ந்துள்ளார். "மனித உரிமை போராட்ட வீரர்" என்பது இவருக்கு வலுவாகப் பொருந்தும் என்று திறனாய்வாளர்கள் கூறியுள்ளனர். நெப்போலியன், பீதோவன், ஹியூன், காண்ட் முதலியோரது சமகாலத்தவர். புகழ்பெற்ற இசைமேதை பீதோவனுக்கும் இவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. அது இருவரும் செவிடர்கள் என்பது.

பிரான்ஸ்சிஸ்கோ கோயா நவீன ஜனநாயக விழுமியங்களின் ஆதரவாளர். இவர் வாழ்ந்த காலம் அமெரிக்க, பிரெஞ்சு புரட்சிகளையும் பிரெஞ்சு மற்றும் ஸ்பானிய தீபகற்ப போர்காலத்து பயங்களின் இடையே வாழ்ந்தவர். அதனால்தானோ இவரது படைப்புக்கள் போர், பயங்கரம் போன்ற தன்மையை உடையது. மேற்கத்தேய உயர் ஸ்தானிகர் கலையில் இவருக்கு முக்கிய இடம் உண்டு. இவரது ஓவியங்கள் அழகியல் பண்புநலனுக்காக எந்த அளவுக்கு திறனாய்வாளர்களது பாராட்டு பெற்றுள்ளதோ அதேவேளை அநீதி, அடக்குமுறை, அதிகார அத்துமீறல், அதிகாரம் துஸ்பிரயோகம் பற்றிய இவரது வன்மையான கண்டனமும் போரின் நாசங்களுக்கு எதிராக நெஞ்சுருக்கும் காட்சிகளைக் கொண்டிருந்தது.

பழைய மரபுப் பாணிகளைக் கைவிட்டுவிட்டு தனக்கென ஒரு பாணியினை உருவாக்கி அதில் வெற்றிகண்டவர் பிரான்ஸ்சிஸ்கோ கோயா. இவரது காலத்தில் நிலவிய சமூக அரசியல் அநீதிகளுக்கு எதிராக எதிர்ப்புக் குரலாக அமைந்த இவரது கலை ஏனைய நாட்டவர்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் பாடமாகவும் அமைந்தது. இன்று பெரும்பாலும் பேசப்படும் "நவீன ஓவியம்" என்ற பெரிய சங்கதியை உருவாக்கியவர் இவரே. நவீன ஓவியத்தின் முன்னோடி பிரான்ஸ்சிஸ்கோ கோயா என்று அமெரிக்காவின் புகழ்பெற்ற ஓவிய விமர்சகர் பெரஷ்சன் (Berenson) கூறுகின்றார். அவர் மேலும் கூறுகையில் பிரான்ஸ்சிஸ்கோ கோயாவோடு நவீன ஒழுங்கீனம் ஆரம்பமாகியுள்ளது. ஆனால் ஓவியத்தின் புதிய பாதையை இவர் வகுத்தார் என்பதை மறுக்கமுடியாது. சுதந்திரப் போக்கு அவருடைய ஓவிய முறையில் மிளிர்ந்தது என்று கூறியுள்ளார்.

"பிரான்ஸ்சிஸ்கோ கோயா எல்லா நவீன ஓவியப் பாணிக்கும் முன்மாதிரியான கலைஞர். ஏனெனில் நவீன ஓவியம் என்பதே பிரான்ஸ்சிஸ்கோ கோயா கொண்டிருந்த கலைச் சுதந்திரத்திலிருந்து பிறந்ததொன்றே" என்றார். அறிஞர் மால்ராக்ஸ் எனப் பல கலை விமர்சகர்கள், அறிஞர்கள் பிரான்ஸ்சிஸ்கோ கோயாவினைப் பாராட்டியுள்ளனர்.

**பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் கலைவாழ்வு**

வடக்கு ஸ்பெயின் உள்ள கிராமப்புறமான Fuendetodos எனும் இடத்தின் 1746ம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி பிறந்தார். இவரது முழுப்பெயர் Francisco Jose de Goya Y

Lucientes என்பதாகும். தந்தையின் தொழில்வாய்ப்புக் கருதி இவரது குடும்பம் Saragossa என்னும் இடத்திற்கு குடிபெயர நேரிட்டது. பிரான்ஸ்சிஸ்கோ கோயா தனது ஆரம்பக் கல்வியை சமய பாடசாலை ஒன்றிற்குச் சென்று கல்வியினைத் தொடர்ந்தார். சிறு வயது முதலே இவர் துணிவும் துடுக்குத்தனமும் நிறைந்தவராகக் காணப்பட்டார்.

உள்ளூர் ஓவியரான Jose Luzan என்பவரிடம் சிறிது காலம் கலைபயின்றார். பின்னர் ஓவியக்கலை மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு அது தொடர்பான உயர் கல்விக்காக பெரும் பொருட் செலவில் இத்தாலிக்கு 1870இல் பயணமானார். உயர் கல்வியைக் கற்று முடித்துவிட்டு கைதேர்ந்த ஓவிய வல்லுநராக மீண்டும் Saragossa திரும்பினார். பின்னர் அவ்வூர் தேவாலயங்களில் தன்னுடைய கைவண்ணத்தைக் காட்டினார். மதமான அலங்கார வேலைப்பாடுடைய இந்த வேலைப்பாடுகள் பிரான்ஸ்சிஸ்கோ கோயாவுக்கு தனி அடையாளத்தைக் கட்டியெழுப்புவதில் முதன்மையாக இருந்தன. அப்பொழுதுன் அவ்வூரிலிருந்த ஓவியக்காரரான Francisco Bayew என்பவருடன் இணைந்துகொண்டார். இவ்விணைப்பு இவரைப் பல வழிகளில் பரிணமிக்கச் செய்தது. பின்னர் Francisco Bayew என்பவரின் தங்கையான Josefa Bayew என்பவரை 1773இல் மணமுடித்தார். பல குழந்தைகளுக்குத் தந்தையாகிய போதும் ஒரு குழந்தை மட்டுமே உயிர் தப்பியிருந்தது. இவருடைய ஒரு மகன் Xavia என்பவர் பருவ வயதினை எய்தி உயிர்வாழ்ந்தார் என்று கூறப்படுகின்றது.

1775ஆம் ஆண்டிலிருந்து 1792ஆம் ஆண்டுவதை ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டில் (Madrid) உள்ள அரசசபைக் கூடங்களை அலங்கரிக்க கார்டுன்களை வரைந்தார். இது இவரது கலைத்துவ வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை ஏற்படுத்தியது. அரசசபை கலைஞராக விளங்கிய பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் இந்தக் காலப் பகுதியில்தான் இவரது அற்புரமான படைப்புக்கள் வெளிவந்தன. நாளாந்த வாழ்க்கையை தான் காணிபதிலே எல்லாம் ஓவியமாக்கிய பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் படைப்புக்கள் ஒவ்வொன்றுமே உள்ளத்தை நெருக்குதல் செய்த விடயங்களின் வடிவமாகும்.

மனித நடத்தைக் கோலங்களை மிகுந்த அவதானத்துடன் உன்னிப்பாக அவதானிப்பது அவருக்குக் கைவந்த கலை. நவ செந்நெறி வாதத்தால் (Neoclassicism) வெகுவாகக் கவரப்பட்டிருந்த பிரான்ஸ்சிஸ்கோ கோயாவிற்கு “றொக்கக்கோ” (Rococo) பாணி மீதான ஆவல் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. மிக நளினத்தன்மையான ஓவிய உத்திகளைக் கையாண்டு மகத்தான படைப்புக்களைத் தந்த பிரான்ஸ்சிஸ்கோ கோயா உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவராக விளங்கினார்.

இந்நிலையில் பிரான்ஸ்சிஸ்கோ கோயா ஸ்பானிய அரசசபையின் உத்தியோகபூர்வ ஓவியக்காரராகும் சந்தர்ப்பம் கிடைத்தது. பிரதி மெய்யுருக்கலையினை வளர்க்கும் சந்தர்ப்பம் நிறையவே கிடைத்தது. இதன்மூலமே பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் புகழ் எங்கும் பரவியது. பிரான்ஸ்சிஸ்கோ கோயா அரசசபை சித்திரக்காரராக மகிழ்ச்சியடைந்து வாழ்ந்தாராயினும் இவருடைய சித்திரங்கள் வழமையாக அரசியல் ஆட்சியாளர்களையும சமூக சமய அமைப்புக்களை விமர்சிப்பதாகவும் இருந்தது. அதனால் இவ் அரசசபை சித்திரக்காரர் வேலையும் அமையவில்லை ஆயினும் அங்கு பணிபுரிந்தார்.

1792ம் ஆண்டு பிரான்ஸ்சிஸ்கோ கோயாவுக்கு வந்த கொடிய நோய் அவரைச் செவிடாகியது. இதன் காரணமாக பிரான்ஸ்சிஸ்கோ கோயா ஏனையவர்களிடமிருந்து வேறுபட்டதாக உணர்ந்தார். மனித இனத்தைப் பற்றிய விசித்திரமான எண்ணங்கள், அநீதமான கற்பனைகள் அவரைப் புனைவுத் தன்மைக்கு இட்டுச்சென்றன. அடிக்கடி மிகுந்த மன அழுத்தத்தில் ஆளாகிவந்தார். ஆயினும் பிரான்ஸ்சிஸ்கோ கோயா கலைப்படைப்பினைக் கைவிட்டுவிடவில்லை. மிகவும் துணிச்சலாகவும், சுயாதீனமானதுமான ஓவியப்பாணி ஒன்றினை முன்னெடுக்கிறார். Caricature பாணியை மிக ஒத்த பாணியாக இது இருந்தது. இவர் 1799இல் பிரசுரித்த

Caprichos இதழில் இப்பாணியினை உடைய ஓவியங்கள் பல வெளிவந்தன. அவை பெரும்பாலும் மனிதத்துவத்தின் தோல்விகள், போலிகள், வக்கிரகங்கள் என்பவற்றினைப் படம்பிடித்துக்காட்டின.

பிரான்ஸ்சிஸ்கோ கோயா தான் கண்ட மனிதர்களின் உருவங்களை வரையும் போது அவற்றினூடு தான் உணர்ந்தவைகளையும் வெளிப்படுத்துமாறு செய்தார். இவர் மத சம்பந்தமான ஓவியங்களில் ஒருவித நடப்பியல் தொடர்பான வித்தியாசமான பாணியைக் கொண்டிருந்தார். 1785ஆம் ஆண்டிலிருந்து 1797ஆம் ஆண்டுவரை Royal Academy யின் ஓவியப்பகுதிக்கான இயக்குநராக பிரான்ஸ்சிஸ்கோ கோயா பணியாற்றிய காலப்பகுதியில் பல இளம் ஓவியர்களுக்கு முன்னுதாரணமாக கலைப் படைப்புக்களையும் செயலிலும் ஈடுபட்டிருந் தார்.

ஸ்பெயின் மீதான பிரான்சிஸ் படை யெடுப்பின் போதும் ஸ்பானிய சுதந்திரத்திற் கான யுத்தம் நடைபெற்ற போதும் பிரான்ஸ்சிஸ்கோ கோயா பிரான்சிஸ் அரசசபை சித்திரக்காரராக விளங்கினார். ஆயுத மோதல்களின் அவலங்கள் போரின் கொடுமைகள், அழிவுகள் (The Disasters of war) என்னும் தலைப்பில் தொடர் ஓவியங்களை வெளிப்படுத்தினார். அவை பிரான்ஸ்சிஸ்கோ கோயா இறந்த பின்புகூட வெளிவரவில்லை. ஸ்பானிய முடியாட்சி யினைத் தக்கவைக்கும் வரைக்கும் ஸ்பெயினில் கடமையாற்ற அழைக்கப்பட்ட வேளை அரசினுடைய விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டியவராவார். ஏனெனில் அவர் வரைந்த (The Naked Maja) என்றும் "நிர்வாணமாயா" ஆகும். இதனைத் தொடர்ந்து இவ் ஓவியம் கத்தோலிக்க நீதிமன்றத்துக்கும் அவரைக் கொண்டு போனது.

"நெப்போலியனின் படையெடுப்புக்கள் ஸ்பெயின் மீது நடைபெற்றபோது அங்கு நடைபெற்ற குழப்பங்களைப் பார்த்த பிரான்ஸ்சிஸ்கோ கோயா "The Second of may", "The third of may" என்ற ஓவியத்தினையும் தீட்டினார். அவை இரண்டும் முற்றுமுழுதான யுத்தம். கொலை, மரணதண்டனை, யுத்த தளபாடங்கள் ஏங்கிய கொடூரம் போன்ற கருத்துக்களை சித்தரிக்கின்றன. 1816ஆம் ஆண்டில் மாட்டுச்சண்டை எனும் பெயரில் (Bull fighting) என்னும் பெயரில் இவர் வரைந்த ஓவியம் மிகுந்த கனதியை கலை ஆர்வலர்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இது மாட்டுச்சண்டை என்பதை வெளிப்படுத்தினா லும் முற்றுமுழுதாக சண்டைக் காட்சியினை வெளிப்படுத்தின.

1824இல் ஸ்பெயினில் "லிபரல்" காட்சியானது மீண்டும் அரசமைக்க எடுத்த முயற்சிகளில் தோல்வியடைந்தது. அதனால் அங்கு தங்கியிருக்க முடியாமல் போனது. விரும்பியோ விரும்பாமலோ ஸ்பெயினை விட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணங்கொண்டு பிரான்ஸுக்குச் சென்றார். இதற்கு பிரான்சின் புதிய அரசே காரணம் எனலாம். அரசசபை உத்தியோகத்தினை விட்ட பின் மட்றிட்டிலிருந்த (Madrid) ஒதுக்குப்புறமான ஓர் அமைதியான கிராமத்தில் வீடொன்றினை வேண்டிக் கொண்டு அவ்வீட்டுக்கு "செவிடன் வீடு (House of the Deaf Man)" எனப் பெயரிட்டார். அதன்பின் தனக்குப்பிடித்த தன் பாணி ஓவியங்களை வரையலானார். அவரது வீட்டுச் சுவர்களை "இருள்நிற ஓவியங்கள் (The Black paintings)" இடம்பிடித்தன. உலகம் பற்றிய தன் இருண்ட சிந்தனைக்கும் கறுப்பு வர்ணத்தைக் கையாண்டார். வெளியே சொல்லமுடியாத அவலங்களையும், வக்கிர கங்களையும் கறுப்பு என்பின்ற வர்ணத்தின் மூலம் சொல்ல முனைந்தார். இந்த உளப்பாங்கை "Darkest Vision" என்று கலை விமர்சகர்கள் கூறினார்கள். முற்றிலுமே புரலயமான சிந்தனைகளுடன் ஒரு மனநோயாளி போல் ஆகிவிட்ட இவருக்கு எல்லாமே கறுப்பு என்றாகிவிட்டது. இதனால் தான் கோயாவினை "இருளின் ஆற்றலை எதிர்த்த கலைஞன்" என்று புகழாக சூட்டினார்.

1828ஆம் ஆண்டு வரை தனது கலைப்படைப்புக்களை படைத்துக் கொண்டே இருந்தார். பிரான்சிற்கு சென்று நான்கு வருடங்கள் நிம்மதியாக வாழ்ந்தார். இவ்வாறாக வாழ்ந்து வரும் காலத்தில்

கலைப்பயணத்திற்கு ஓவியப்படைப்புக் களுக்கும் ஒரு ஓய்வினைக் கொடுத்தார். 1828ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள Bordeaux என்ற கிராமத்தில் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி 83 வயதில் இயற்கை மரணமெய்தினார்.

பிரான்ஸ்சிஸ்கோ கோயா இறந்து பல வருடங்களின் பின்புதான் இவருடைய உடல் ஸ்பெயினுக்கு கொண்டுசெல்லப்பட்டது. மட்ரிட்டில் சான் ஆன்ட் டி லா டோனியா ∴புளாரிடா மடாலயத்தில் இவரே தம் கலைத்திறனால் அலங்கரித்திருந்த குவி மாடத்தின் அடியில் அமைந்துள்ள சிலுவையின் அடித்தளத்தில் இவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இங்கு இவர் தீட்டியுள்ள சுவர் ஓவியங்கள் இறைமை நூலின் தொடர்க் காட்சிகளையோ, பரவசமூட்டும் கற்பனைக் காட்சிகளையோ சித்தரிக்கவில்லை. மாறாக அன்றாட வாழ்க்கையில் நீதியை நிலைநாட்ட நடக்கும் போராட்டங்களையும் மனித உரிமை மீறல்களையும் இவை சித்தரிக்கின்றன.

இவரது படைப்புகள் பல மட்ரிட்டில் (Madrid) உள்ள "Prado art museum" இல் தொடங்கி பிரான்ஸ்சிஸ்கோ கோயாவின் புகழைப் பரப்பியவண்ணம் உள்ளது. பிரான்ஸ்சிஸ்கோ கோயாவினை "நவீனங்களின் தந்தை" என அழைக்கப்படுவது உண்டு. தொடர்ந்து இவரது 25ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவினை ஒட்டி Saragossa பல்கலைக்கழகத்தாலும் Ferndoel Cafolico என்ற நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கண்காட்சியும் நினை வுரை நிகழ்வும் இவரின் கலைச் சாதனை பயணத்தின் சிறப்பினை நினைவுகூரத்தக் கதாகும்.

- **ஒரு மனிதன் அதிகமாகப் பேசினால் வாயாடி. அவன் குறைவாகப் பேசினால் கூச்சமுள்ளவன். அவன் அதிகமாகச் செலவழித்தால் ஊதாரி. அவன் குறைவாகச் செலவழித்தால் கருமி. அவன் முன்னெடுத்து வைத்தால் அவன் அடங்காதவன். அவன் பின்வாங்கினால் சோம்பேறி. அவன் அதிகம் வற்புறுத்தினால் பிடிவாதம் உள்ளவன். அவன் குறைவாக வற்புறுத்தினால் சலன புத்தி உள்ளவன். அவன் இடம்கொடுத்தால் அவனையே மலிவாக்கிக் கொள்கிறான். அவனே மனிதன்.**
- **உழைத்தவன் கூலியை அவன் வியர்வை காய்ந்துவிடும் முன்பாகவே கொடுத்துவிடுங்கள்.**
- **படித்துக் கெட்ட ஆண் இல்லை. பணிவால் கெட்ட பெண் இல்லை.**
- **மற்றவர்களுடன் நேசமாக உள்ள இடத்தில் தண்ணீர் கூட இனிப்பாக இருக்கும்.**
- **வாங்குகிறவனுக்கு 100 கண்கள் தேவை. விற்கிறவனுக்கு ஒரு கண் போதும்.**
- **மனிதனுடைய பேச்சுத்தான் அவன் எண்ணங்கள் வெளிப்படுத்தும் கண்ணாடி.**
- **ஒருவனுக்கு மீன் வேண்டுமானால் மீனைக் கொடுக்காதே. அவனுக்கு தூண்டில் போடக் கற்றுக்கொடு.**
- **பணம் தேடுதல் அவ்வளவு கடினம் அன்று. அதை முறையாகச் செலவழிப்பதே கடினம்.**
- **நடந்தால் நாடெல்லாம் உறவு. படுத்தால் பாயும் பகையும்.**
- **வாய் நல்லதானால் ஊர் நல்லது.**
- **வீண் வதந்திக்கு வாகனம் தேவையில்லை.**

# Americans From Across the Atlantic

Who were the new people who began coming to the land of the American Indians? Most of them were Europeans. Some, like the Spaniards, came for "Gold. Glory, and God." Others, like the French, came in search of wealth. They hoped to get rich by trapping animals and selling their skins. The Dutch were looking for the farmland that was so scarce in their country. The English came to escape a land growing overcrowded and to find religious freedom.

People from Africa also came to America. Some were explorers and guides. Some were indentured servants. But most were brought as slaves by the European settlers.

The first Europeans to come were the explorers. They traveled the continents of North and South America, mapping the lands and waterways. The explorers claimed huge territories as the property of their governments. Their work paved the way for the next groupthe settlers. The settlements these people established were colonies. Colonies are places under the control of another country.

These colonies were ruled by the country from which the settlers came. And the colonies were very important to their parent countries. Spain, France, the Netherlands, and England had great dreams of building empires. An empire is a group of countries or peoples under one ruler. The countries wanted to extend their power and property beyond their own borders. They needed colonies to make their dream come true. The colonies would supply the European countries with furs, food, minerals, and wood. The European countries would become even richer.

So the Europeans came, in small bands at first and then in great numbers. As the settlers came, the Indians were driven off lands where they had lived for thousands of years. In this chapter, you will read about the many groups of newcomers to America and the colonies they established.



**Voyages Of the Vikings**

Who started this mass movement from Europe to America? Actually, it was not the empire-builders just mentioned. It was the Vikings, daring sailors from Norway, Sweden, and Denmark- For centuries they worked their way west. The Vikings settled first in Iceland

and then in Greenland. Their adventures arc known from the stories handed down through generations. These Viking stories are called sagas. The next story is based on a saga about Leif Ericson, or "Leif the Lucky.

## *Leif Ericson's Voyage to America*

In about the year 1000, Ericson began a long voyage sailing southwest from Greenland. He and 35 other Vikings set out in a long, narrow boat with a single square sail. When there was no wind the sailors provided the power for the boat, using long oars. With their strong arms they rowed the boat night and day. This way they covered hundreds and hundreds of miles.

Leif Ericson was the first European ever to reach America. No one knows for sure exactly where he landed. His party first went ashore at a bare spot that Ericson named Land of Flat Stones. It may have been Baffin Island, off the coast of Canada.

From here the party rowed farther south. They landed the second time on a sandy beach at the foot of gently sloping forests. Ericson named this place Land of the Woods. This time they probably had reached Nova Scotia.

After a short stop, the hearty band set out again. For two days they rowed, helped along by the wind. When the Viking sailors landed for the third time, they found green pasture land. The rivers there were filled with salmon. They even found grapevines growing wild. Ericson named this place Land of the Vines, or Vinland. They probably had reached Newfoundland.

By now winter had set in. Brave though they were, Ericson and his companions did not want to risk winter storms at sea. So they set up camp in Vinland. When spring came, they once more took to their oars and returned to Greenland.



Viking Route to North America

### *Vikings Try to Settle America*

Ericson's accounts of Vinland led to several Viking attempts to colonize it. But life there was hard. And the American Indians made it clear the newcomers were not welcome. The 3.000 Viking colonists fought off many Indian attacks. But finally they had to give up and return to Greenland.

The American Indians had driven away the first wave of European settlers. But they had no way of knowing more would be coming-in greater numbers and with better weapons.

### Checkup

1. From which European countries did the Vikings come?
2 Who was the first European to come to America?
3. What part of No.rth America did the Vikings try to colonize? Why did they leave?
4. How do we know about the Vikings?

## COLUMBUS REACHES AMERICA

While the Vikings were exploring lands to the West, other Europeans turned their eyes to the East, toward Asia. Early travelers, such as Marco Polo, brought back the news that China and the Indies had spices, jewels, and other goods the Europeans wanted. But overland trade routes to these places were long and dangerous. Europeans wanted to find fast ways to reach the East.

### *Search for New Trade Routes*

Europeans looked to the sea for routes that took less time and were cheaper. They found two water routes. Trace these routes on the map on page 109. As you can see. one went east through the Mediterranean Sea, past the Arabian peninsula, and across the Indian Ocean. Later, the Portuguese found a second route. It went down the west coast of Africa, eastward around the tip. and up into the Indian Ocean. But these routes also took a long time.




Surely, there must be a shorter way. Christopher Columbus thought he knew what it was.

### *Columbus Sails West to Reach the East*

Columbus was born in the seaport of Genoa, Italy, in 1451. By the time he was 30 years old, he was a sailor and mapmaker. Like many other people of the time, Columbus was certain the earth was rojand. So, he % reasoned, a sea route heading westward would lea'd to the East. Was Columbus right? What did he not know?

Today, everyone knows it is possible to sail west to find a route to the East. But in the 15th century; everyone did not know this. Although scholars in the 15th century knew the earth was round, most people believed the earth was flat" If the earth was flat, what would happen to the sailors who tried to sail around it? Columbus had trouble getting people to pay for his trip. He spent years seeking money he needed for ships and sailors. Finally, Queen Isabella of Spain gave him the money he needed for his voyage.



On August 3, 1492, Columbus left Spain with his three ships the *Nina,* the *Pinta*, and the Santa *Maria.* The little fleet sailed west, hoping to reach the Indies. The trip was long. Many of the sailors wanted to turn back. Finally, more than two months after leaving Spain, they saw land. Many years later, this is how Columbus described what happened.

Finally I reached the Indian Sea. Here I discovered many islands. I took possession with-out resistance in the name of our illustrious ruler. To the first of these islands, I gave the name San Salvador. To

another I gave the name Juana. When we first arrived at Juana, 1 sailed along its coast a short distance westward. I found it to be so large that I could not think it was an island, but China itself.

But had Columbus really found the western route to the Indies? He was so sure he had that he called the people he found *Indians*. He was wrong though. It was not the Indian Sea Columbus had found but the Caribbean Sea. When he set foot on San Salvador, he had reached the Bahamas, not the Indies. And Juana was not China but Cuba.

Study the map on the top of this page and trace Columbus's first voyage. As the map shows, it was just the first of four voyages. Where did the other three take him? On which voyage did he land on the mainland of South America?

Columbus never knew he had not reached Asia. He died never knowing he had found the southern part of the land Leif Ericson and the Vikings had reached nearly 500 years earlier.




***Reference :***

***Book of The American People***

Our knowledge comes from our experience but experience comes from our mistake.

Secspire

# இன்றைய மாணவரில் போர் ஏற்படுத்தும் தாக்கங்கள்...

போரினால் நொந்து துடிக்கின்ற மண் இது. அப்பப்பா! எத்தனை வருடங்கள் இக்கொடிய போர் எம்மண்ணில் தொடர்கிறது. மண் வாசனை பற்றிக் கூறுவது என் நோக்கமல்ல. மனிதனின் சுதந்திர வாழ்வுத் தடைகள், முரண்பாடுகள் இம்மண்ணில் வாழ்கின்ற மாணவச் செல்வங்களில் ஆழமாக பதித்த "தாக்கங்களை" "நான்" வாசகர் மனங்களில் இளையோடச் செய்வதே என் எண்ணமாகும்.

கடந்த 25 ஆண்டுகளாக போர் எம்மை ஆட்டிப்படைத்து, எம் வாழ்வுப் பயணத்தில் சிறிது சிறிதாக சிதைவுகளை ஏற்படுத்துகின்ற வரலாறுகளை இம்மண்ணில் வாழும் பண்பட்ட மனிதர்கள் யாரும் மறப்பதில்லை. மனித வளங்களின் கோபக் கனல்களே, வன்முறைகள் என்ற எரிமலையாகி, போர் போர் என்று முதலாம் இரண்டாம் உலகப்போராக வெடித்தது. அதன் தாக்கங்கள் யாவும் உலகினர் கண்ணுக்கு துலாம்பரமாக தெரிந்தமை இன்றைய மாணவர்களில் பலருக்குத் தெரியாது. ஆனால் இம்மண்ணில் சுதந்திரங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டபோது இங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மனங்களில் ஏற்பட்ட கலக்கங்களே உள்நாட்டுப் போராக வெடித்தது. இது எம் வீட்டுக்குள்ளும் புகுந்து எம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கும் என்று எம்மில் யார் நினைத்தார்கள்? "வன்செயல்கள் வன்செயல்களைப் பிறப்பிக்கும்" என்பது இன்று நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் நிஜமான நிதர்சனங்களாகும். இவற்றை உள்வாங்கவோ, விரும்பி ஜீரணிக்கவோ முடியாவிடினும் இது கசப்பான விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மையாகும்.

இக்கொடியபோர் மாணவர்களின் பிஞ்சு மனங்களில் அழிக்கமுடியா தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றது. கருவறையில் அவர்கள் கருக்கொண்ட கணப்பொழுது தொடங்கி பத்துத் திங்கள் பக்குவமாக உருவெடுக்கும் போது, கருவறையில் இருந்து வெளிப்பட்டு உலகைத் தொடும் போது தாக்கங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இச்சூழமைவில் கருவான, உருவான பிறந்த வளர்ந்த குழந்தைகளே இன்றைய மாணவச் செல்வங்கள்.

இன்று இவர்களில் பலர், விசித்திரமான குணாதிசயங்களைக் கொண்டு விளங்கு கின்றனர். மலர்ந்து கனிந்து வாழ வேண்டியவர்களின் முகங்களில் மகிழ்ச்சி இல்லை. "பயம்" பயங்கரமாக இவர்களைப் பற்றிப் பிடித்து கொடுமைப்படுத்துகின்ற பேரவலத்தைப் பார்க்கும் எவரும் வேதனைப் படாமல் இருக்கவே முடியாது. சோர்வும் விரக்தியும் "நீயா நானா" என்று இவர்களில் போட்டி போட்டுக்கொண்டு முந்திக்கொள்ளும் தன்மையும் உண்டு. பலவற்றைப் பறிகொடுத்தவர்கள் போன்று சிலவேளை களில் தென்படுவர். மறுகணமே "அபாரசக்தி" படைத்தவர்கள் போன்று செயற்படுவார்கள். "சத்தங்களில் அதிக விருப்பம்" கொண்ட சந்ததியினர் இவர்கள். சத்தம் போட்டுக் கொண்டே அடுத்தவர்களைக் குழப்புகின்றோ மென்ற எண்ணம் எதுவும் இன்றி இருப்பர். சத்தங்களே வாழ்க்கைச் சரித்திரமானதால் அது அவர்கள் உணர்வுகளுக்கு ஒன்றும் புதிதல்ல. யாழ்ப்பாணம் காலம் காலமாகக் கட்டிக்காத்த, விரும்பி வளர்த்த விழுமியங்கள் பற்றி இவர்கள் அதிகம் தங்களை அலட்டிக்கொள்ள மாட்டார்கள். இது எம்

பண்பாட்டுச் சொத்துக்கள் என்ற கருத் தோட்டம் கணிசமானவர்களில் மட்டுமே காணப்படுகின்றது. உடல் உள சமூக ஊனங்கள் இவர்களிடம் அதிகமுண்டு. உடலைவிட ஊனங்கள் வகைப்படுத்த முடியாத அளவு, மாறிமாறி உணர்வுகளில் வெளிவரும். உள்ளங்களை இழந்தோர் தொகை மலிந்து காணப்படுவதால், உயிர்த்துடிப்பான சமூகப் பெறுமானங்கள், சமுதாய வளர்ச்சிக்கான புதிய ஆக்கங்கள், கண்டுபிடிப்புக்கள் அரிதாகவே இவர்களால் பிறப்பிக்கப்படுகின்றன. ஆனால் இத்தகை யோரிடமிருந்து சமூகம் எதிர்பார்ப்பதோ ஆயிரம் ஆயிரம்.

பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகள் எல்லோரும் நல்ல பிள்ளைகள்தான், ஆயினும் படிப்பில் எல்லோருக்கும் அவ்வளவு நாட்டம் இல்லை. குழம்பிப்போதல் இவர் களுக்கு மிக விருப்பமான ஒன்று. யார் குழப்பினாலும் இலகுவாக குழம்பிப்போய் விடுவார்கள். இவர்களிடம் நிறைந்துள்ள திறன்களை வெளிக்கொணர, பல்தேர்ச்சித் திறன்களை வளர்க்க ஆசிரியர்கள் படும்பாடோ வார்த்தைகளில் விபரிக்க முடியாதவை. கற்பதற்கு ஏற்ற கவின் நிலையை உருவாக்கி கற்பிக்க முயற்சிக்கும் பொழுது அடிக்கடி சூனியச் சூழல்கள் எப்படியோ இவர்களைக் குழப்பிவிடும். "கவனக்கலைப்பான்கள்" கரப்பொத்தான் பூச்சிகள் போன்று எல்லாப் பாடசாலைகளிலும் உள்ளும் புறமும் இருக்கத்தான் செய்கின்றது. இலகுவாகக் கற்கும் நேரங்களில் சோர்ந்துவிடக்கூடிய சக்தியற்ற உடல் தோற்றங்கள் இவர்களிடம் உண்டு. சக்திதரும் உணர்வுகளைவிட "Short eats, Soda" பிரியர்கள் இவர்கள். உறவுகளை மதித்தல், முதியோரைக் கனம் பண்ணுதல், குருக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களை மதித்தல் என்பன அடிக்கடி இவர்களில் குறைவுபடும். பின்தொடர்ந்து உணர்த்தாவிடில் மறந்தவர் கள் போன்று இருப்பர். குறு சினிமா, குறு தொடர் நாடகங்கள், வளைவு நடனங்கள், விரைவுப் பாடல்களில் அதிக நாட்டம் உடையவர்கள். இன்னும் ஒரு வாரத்தில் பரீட்சைகள் நடக்கும் என்றாலும், இத்தகைய குறுகிய இன்பங்களில் பலமணி நேரங்களில் செலவிடுவதற்கு முந்திக்கொள்வார்கள். யாழ் மண்ணில் பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை இல்லை என்றாலும், அத்திய பழக்கத்தை மாணவர்களுக்குப் பழக்குவதற்கு பல விளம்பரதாரிகளும், முகவர்களும் முனைப்பாக ஊடுருவ முனைந்த சந்தர்ப்பங் களும் இங்கு உண்டு. சமூக விரோதச் செயல்களில் அவர்களை ஈடுபடத் தூண்டும் தூண்டிகள் ஆங்காங்கே "உதிர்சுவர் ஒட்டுண்ணிகள்" போன்று சமூகத்தில் இருக்கிறார்கள். "பாடசாலைகள் சமூகத்திற்கு திறந்துவிடப்பட வேண்டும் என்றால்" இத்தகைய பல்லுருவிகளை இனங்காண வேண்டிய பொறுப்பு சமூகநலன் காக்கப் போராடும் அனைவரின் தலையாய கடமையா கும். துயரமான வாழ்க்கைக் கோடுகள் விரக்தியின் கோலங்கள், வகுப்பறையில் கண் சிமிட்டும் இவர்கள் வதனங்களில் சிலவேளைகளில் தெட்டத் தெளிவாகத் தெரியும் போது எம் மனங்கள் வேதனையால் வெந்துபோகும். சின்னப் பிள்ளைத் தனத்தினால் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற "மிதவாதப்போக்கு" இவர்களில் அடிக்கடி காணப்படுகின்றது. தங்களுக்குள்ளேயே தாங்கள் முரண்பட்டு அதில் சிறைப்பட்டு உடைந்து சிதறும் தன்மைகளும் இவர்களில் அடிக்கடி சந்திக்க வேண்டியதொன்று. "ஆன்மீகம்", "மனச்சாட்சி" இவையெல்லாம் இவர்களுக்கு இடைக்கிடை தேவைப்படும் ஒன்றுதான்.

நிகழ்காலத்தில் நிமிர்ந்துநின்று குதூகலிக்க வேண்டிய ஆண்களும், பெண்களும் சிறு பிள்ளைகளும் சுகமிழந்து, பாதுகாப்பிழந்து, உறவிழந்து, உயிரிழந்து, உயர்ச்சிகள் பலவற்றைப் பெறும் சந்தர்ப்பங்கள் இழந்து, அடிப்படை உரிமைகள் யாவும் இழந்து வாடி வதங்கி வடுக்களைத் தாங்கியவர்களாய், பயந்து பயந்து நடமாடுவதைப் பார்க்க, நெஞ்சம் குமுறுகின்றது. கோபம் எல்லையைத் தாண்டி வெளிக்காட்டப்பட வேண்டியதொன்றாகின்றது. ஆனால் யாரில் நோவது? நொந்துதான் என்ன பயன்? கண்ட சுகம்தான் என்ன?

ஒட்டுமொத்தமாக நோக்கின் இத்தகைய மாணவர்களுக்கு

* பாசப் பொழிவுகள் கிடைப்பது அரிது.
* நண்பனின் உடனிருப்பு பஞ்சம்
* அடிப்படை வசதிகள் அருந்தல்
* சில வசதிகளையேனும் மனித

இயந்திரங்களாக, கேடயங்களாக மாற்றப்படும் நிலைகள்.

* கல்வி என்னும் "எதிர்கால வெளிச்சம்" பறிக்கப்பட்ட பரிதாப நிலை.
* இடம்பெயர்ந்து சில இழிவான சமூகச் சூழலுக்குத் தள்ளப்பட்ட நிலை.
* எம் பண்பாடுகள், விழுமியங்கள் பற்றி தெளிவற்ற வாழ்க்கைப் போக்குகள்.
* சுதந்திரமான சிந்தனைகள், கருத்தோட்டங்கள், வெளிப்பாடுகளை முன்வைக்க முடியாத அடக்குமுறைகள்.
* இளமையின் இனிமைகள் வீணடிப்பு.
* அக்கறையற்ற அசமந்தப் போக்குகள்.
* திறன்கள், சேதமாக்கப்படுதல், இதனால் சேத விரயம் அதிகமாதல்.
* உளச்சமநிலை தளம்பல்கள்.
* ஏக்கமும் பயமுமே வாழ்க்கையாக்கப்படும் துரோகங்கள்.
* பொழுதுபோக்குகள், கலையின்ப நாட்டங்கள் விளையாட்டு, வாசிப்பு போன்றவைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் பறிக்கப்பட்டமை.
* தற்காலப்படுத்தலில் அறிவு ரீதியான உச்சநிலை இன்மைகள்.
* பொதுச் சொத்துக்கள், உயிர்கள், உறவுகள், சட்டங்கள், ஒழுங்குகள் போன்றவற்றை நேரிய கண்ணோட்டத்தில் பார்க்க முடியாமல் இருட்டடிப்புச் செய்தமை

போன்ற இத்தகைய இன்னோரன்ன "முகங்களையே" அவ்வப்போது மாணவர்களில் காண முடிகின்றது.

மனிதமே! நீ இவர்களில் கூடிய அக்கறை எடு. அன்புக்காட்டு. புரிந்துகொள். ஆலோசனை கூறு. கூட நடந்துகொள். "பிள்ளைநேயம்" என்றால் பிள்ளை நினைக்கும் விரும்பும், சொல்லும் எல்லாவற்றிற்கும் "ஆமா போடுவதல்ல". இது மாய ஜல வித்தையும் அல்ல. எம் உடல், பொருள் ஆவியை நாம் அன்றாடம் இம்மாணவர்களுக்காக முழுமையாக அர்ப்பணிக்க வேண்டியதொன்று. ஒவ்வொரு பிள்ளைகளும் முற்றிலும் வித்தியாசமானவர்கள். அவர்களுடன் உடன் நடப்பது, கற்பிப்பது, நெறிப்படுத்துவது, வழிகாட்டுவது, ஆலோசனை கூறுவது, அன்பு காட்டுவது, வகைசொல்வது, வளர்த்து விடுவது என்பது அவ்வளவு இலகுவான பணியல்ல. இது நெருஞ்சியில் நடைபயில்வது போன்றது. இத்தகைய பணி செய்பவர்களை விமர்சியாதே. கடுகடுப்பானவர்கள், கண்டிப்பானவர்கள், இதயமில்லாதவர்கள், பேசுபவர்கள் என்று நீ தீர்ப்பிடத் துணியாதே. நீ களத்திற்கு இறங்கி வந்தால், கள நிலமை நன்றாகப் புரியும். நீயும் நானும் படித்த காலமல்ல இது. நீ இத்தகையோருக்கு "குத்தும் முத்திரைகளால்" அவர்களின் நல்ல பணிகளுக்கு தடைக்கல் வைக்காதே. அவர்களை சோர்வுறச் செய்வது நீ செய்யும் பெரிய பாவம்.

"நான்" என்னும் நல்ல நண்பனே! இத்தகைய மாணவச் செல்வங்கள் கடவுளின் சொத்துக்கள். எமக்குக் கடவுள் தந்த கொடைகள். அவர்களை வளர்த்து உருவாக்கும் பணியை நீ செய்துவந்தது போல், இன்னும் சிறப்பாக குறிப்பறிந்து செய்துகொள். உன்னிடமுள்ள புதிய கருவூலங்களால் அவர்களின் ஆற்றல்கள் அனைத்தும் வளரட்டும். ஏனெனில் அவர்கள் தான் "நாளைய தலைவர்கள், தலைவிகள்" அவர்களின் முழு ஆளுமை வளர்ச்சியில்தான் நாளைய நலமான புதிய உலகு உதயம்பெறும். உன்னில் நான் எழுதும் எழுத்துக்களில் ஒன்று என்றாலும், ஒரு மனிதனைத் தொட்டுப் பேசி இன்றைய மாணவச் செல்வங்களின் தாக்கங்களைப் புரிந்து வழிகாட்ட வழிசமைக்கும் என்றால் அதுவே எனக்குக் கிடைக்கும் "ஆத்ம திருப்தி" இனி என்ன பேனாவை நிறுத்தட்டுமா? ஏனென்றால், அதிக உண்மைகளை பேனா முனையால் கொண்டுவர முடியாத "தணிக்கைகள்" இன்னும் பல தாக்கங்களில் உள்ளபடி எழுதமுடியாமல் என்னைத் தடுக்கின்றது.

**மூலம்: 'நான்', உளவியல் சஞ்சிகை, மலர்:32, தை-பங்குனி 2007 இதழ் 01.**

◇ **வாழ்வில் நிறையப் பெறவேண்டுமென்றால் உன்னையே அதிகமாகக் கொடு.**

மலர் சிறப்புடன் மலர வாழ்த்துவோர்

## ஆசைப்பிள்ளை & சன் நகைமாடம்



உறுதியும் உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க வைர நகைகளைப்
பெற்றுக் கொள்ள
சிறந்த நகைமாடம்

ஆசைப்பிள்ளை & சன் நகைமாடம்

நிகரை வீதி
சங்கானை

---

மலர் சிறக்க வாழ்த்துவோர்

## கேம்பிறிச் கல்வி நிலையம்

தரம் 3 முதல் O/L வரை
மாணவர்களுக்கான வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

கேம்பிறிச் கல்வி நிலையம்

அத்துடன் விசேட புலமைப்பரிசில்
வகுப்புக்களும் O/L மாணவர்களுக்கான
விசேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

பிரதான வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Main street
Chankanai
Jaffna

---

மலர் சிறக்க வாழ்த்துவோர்

கட்டிடம் கட்டுவதற்கு
தேவையான மண், கல்,
சல்லி என்பன மலிவான
விலையில்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

## மாலன் மண்ஆலை

பிரதான வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Main street
Chankanai
Jaffna

மலர் சிறக்க வாழ்த்துவோர்



பிஸ்கட் வகைகள்

பால்மா வகைகள்

பலசரக்கு பொருட்கள்

அனைத்தையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**நந்தன் ஸ்ரோஸ்**



பிரதான வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Main street
Chankanai
Jaffna

மலர் சிறக்க வாழ்த்துவோர்

துவிச்சக்கர வண்டியினை
சிறந்த முறையில் மறுசீரமைத்து
கொடுப்போர்



**சோமசுந்தரம் சயிக்கிள் வேக்ஸ்**

மின் சந்தை வீதி
சங்கானை
யாழ்ப்பாணம்

Fish Markrt street
Chankanai
Jaffna

மலர் சிறப்புடன் மலர வாழ்த்துவோர்

**ஐங்கரன் பார்மசி & ஐங்கரன் ரவல்ஸ்**





அனைத்து விதமான ஆங்கில
மருந்துப் பொருட்கள், குழந்தைகளுக்கான
பிஸ்கற் வகைகள், பேபி கிறீம்கள்
பரிசுப்பொருட்கள்
வான் சேவைகள்
போன்றவற்றை பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்



**ஐங்கரன் பார்மசி**

ஆஸ்பத்திரி வீதி
சங்கானை

Hospital Road
Chankanai

AYINKARAN Travels




SARANIYA Offset Printers, Kasippillai Building, Chankanai. 021 4591220